பொதுசன நூலகம்

விலை ரூபா: 15.00


Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 19 சனிக்கிழமை (03.01.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 015




## 10 ஆண்டுகள் புலிகளிடமிருந்த

# கிளிநொச்சி படையினர் வசம்


# ஜனாதிபதி மகிந்த அறிவிப்பு

## ஈடு இணையற்ற வெற்றியெனவும் தெரிவிப்பு

(கொழும்பு)

ஒரு தசாப்த காலமாக விடுதலைப்புலிகளின் அரசியல் தலைநகரமாக விளங்கிய கிளிநொச்சி நகரப்பகுதியை படையினர் கைப்பற்றியுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார். இது தொடர்பில் தொலைக்காட்சி மூலம் தனது அறிவித்தலை ஜனாதிபதி வெளியிட்டார்.

கிளிநொச்சியை மீட்டமையானது ஈடு இணையற்ற வெற்றியென ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)




## எறிகணைத் தாக்குதல்களில் பொதுமக்கள் இருவர் பலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முரசுமோட்டை மற்றும் புளியம்போக்கணை பகுதிகள் நோக்கி படையினர் நேற்று நடத்திய எறிகணைத் தாக்குதல்களில் பொதுமக்கள் இருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் 11 பேர் காயமடைந்துள்ளனர்.

முரசுமோட்டையில் படையினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் ஒன்பது பேர் காயமடைந்துள்ளனர்.

பரந்தன்-முல்லைத்தீவு வீதியில் உள்ள முரசுமோட்டை மூன்றாம் கட்டைப் பகுதியில் படையினர் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.45 மணியளவில் எறிகணைத் தாக்குதல் (12ஆம் பக்கம் பார்க்க)

## விமானத் தாக்குதல்களால் வன்னியில் மக்கள் அவலம்

### நேற்றும் நால்வர் பலி; பலர் படுகாயம்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவில் உள்ள மக்கள் குடியிருப்புகள் மீது வான்படை நேற்று நடத்திய குண்டுத் தாக்குதலில் நான்கு அப்பாவி பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் 5 பேர் காயமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு பகுதியில் நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் வான்படையின் கிபீர் ரக விமானங்கள் நடத்திய தாக்குதலில் முல்லைத்தீவு பல.நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையம் மற்றும் (12ஆம் பக்கம் பார்க்க)

## பெறுபேறுகளை பார்வையிடலாம்


(கொழும்பு)

க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இன்று அதிகாலையே இணையதளத்தில் பார்வையிடமுடியும் என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இணையத்தளத்தில் பெறுபேறுகளை இணைப்பதில் தாமதம் ஏற்பட்டதால் அவற்றை நேற்றுப் பார்க்க முடியாது போனதாகத் தெரிவிக்கப்பட்டது.

பரீட்சைப் பெறுபேறுகளை www.doenets.lk என்ற முகவரியில் பார்வையிடலாம். (ச)

## புலிகளின் அடுத்த கட்ட நடவடிக்கையை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்



### இக்பால் அத்தாஸ் கருத்து

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் அடுத்த கட்டச் செயற்பாடுகள் குறித்து பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும் என இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியை படையினர் கைப்பற்றியமை தொடர்பாக இராணுவ பகுப்பாய்வாளரும் பத்திரிகையாளருமான இக்பால் அத்தாஸ் கருத்து வெளியிட்டுள்ளார். அவர் இது தொடர்பாக தெரிவித்துள்ளதாவது,

கிளிநொச்சியை இராணுவம் கைப்பற்றியமையானது பல்வேறு (12ஆம் பக்கம் பார்க்க)

# விமானப் படை தலைமையகம் முன் நேற்றுத் தற்கொலைத் தாக்குதல்

## இருவர் பலி; 36பேர் காயம்

(கொழும்பு)

கொழும்பில் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள விமானப்படை தலைமையகம் முன்பாக நேற்று மாலை 5.15 மணியளவில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் 2 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 36க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

கொம்பனித் தெருவில் உள்ள விமானப் படையின் தலைமையகத்திற்கு முன்பாக இத் தாக்குதல் இடம்பெற்றதாக விமானப்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இத் தாக்குதல் தற்கொலைத் தாக்குதல் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.


கொல்லப்பட்டவர்களில் விமானப்படையைச் சேர்ந்த ஒருவரும் பொதுமகன் ஒருவரும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு 36 பேர் காயங்களுடன் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் அவர்களில் ஐந்து பேரின் நிலை (12ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வன்னியில் பொதுமக்கள் மீதான விமானத் தாக்குதலை நிறுத்துங்கள்

## யாழ்.ஆயர் ஜனாதிபதிக்கு அவசர கடிதம்



(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு,கிளிநொச்சிப் பிரதேசங்களிலுள்ள இரண்டரை இலட்சம் மக்கள் வன்னிப் பிரதேசத்தின் சிறுபகுதிக்குள்ளேயே இடம் பெயர்ந்துள்ளனர்.

இவர்கள் மீது குண்டுத் தாக்குதல்களை நடத்துவது மிகமோசமான செயற்பாடாகும் .எனவே பொதுமக்கள் மீதான தாக்குதல்களை உடனடியாக நிறுத்துக் கொள் ளுமாறு யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அவசர கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மேன்மை தாங் கிய ஜனாதிபதி அவர்களே! சென்ற மாதம் 31ஆம் திகதியும்,இம்மாதம் முதலாம் திகதியும் பரந் தனை அண்மித்த ஏ35 வீதியில் அமைந்த முரசு மோட்டையில் பொதுமக்கள் குடியிருப் பின் மீது வான் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

31ஆம் திகதி 4 பேர் ஸ்தலத்திலேயே இறந்தனர். மேலும் 18 பேர் படுகாயமுற்றனர். மீண்டும் முதலாம் திகதி 3 தடவைகள் காலையும் மாலையும் விமான தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

மேலும் ஒரு பெண் உட்பட 5 பொதுமக்கள் பலியாகியுள்ளனர். 28 பேர்காயமுற்றுள்ளனர். இக்குண்டுகள் பிரதான வீதியிலும் வீழ்ந்து வெடித்துள்ளன.

இச்செய்திகளை ஊடகங்கள் வாயிலாகவும்,மின்னஞ்சல் வழியாகவும் அனைவரும் அறியக்கூடியதாயுள்ளது.

எனவே அப்பாவி மக்கள்மீது நடத்தப்படும் விமானக் குண்டுத் தாக்குதல்களை உடனடியாக நிறுத்தும்படி பணிவுடன் வேண்டுகின்றேன்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி பிரதேசங்களிலுள்ள இரண்டரை இலட்சம் மக்கள் வன்னிப் பிரதேசத்தின் சிறு பகுதிகளுக்குள்ளேயே இடம்பெயர்ந்துள்ளனர். இவ்வேளையில் இவர்கள்மீது விமானக் குண்டுத் தாக்குதல் களை நடத்துவது மிகவும் மோசமான செயற் பாடாகும்.

இனிமேலாவது பொது மக்கள் குடியிருப்புகள் மீது வான் தாக்குதல்களை தவிர்த்துக் கொள்ள வேண்டுகின்றோம்.

அமைதியை வருவிப்பதற்கான செயற்பாடுகளை, பேச்சுவார்த்தையை ஆரம்பித்து அமைதியை நிலைநாட்ட வேண்டுகின்றோம் என்றுள்ளது. (ச)


## யாழ். ஆசிரியர்களுக்கு தற்காலிக ஏற்பாடு

அரச கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கான ஆசிரியர் நியமனம் பெற்ற யாழ். குடாநாட்டு பட்டதாரிகள், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வடமாகாணத்திற்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவை நேற்று சந்தித்து தங்களது பணி இடங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

அரசக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் தாங்களால் பணி செய்வதற்குச் செல்ல இயலாதுள்ள நிலைமை மற்றும் ஏனைய இடையூறுகள் குறித்து இங்கு எடுத்துக் கூறியுள்ளனர்.

மேற்படி ஆசிரியர்களின் பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மாகாண பிரதான செயலாளர் மற்றும் கல்விச் செயலாளர் ஆகியோருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கலைந்துரையாடியதற்கு இணங்க இப்பட்டதாரி ஆசிரியர்களுக்கு யாழ். குடாநாட்டில் தற்காலிக ஆசிரிய நியமனங்களை வழங்குவதற்கும் இவர்களுக்கான ஊதியங்களை வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச)





கொழும்புத்துறை இந்து ம.வி.இல் அண்மையில் ஆங்கில மொழித்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் கொழும்புத்துறை சென் யோசப் வித்தியாலய சிரேஷ்ட ஆங்கில ஆசிரியர் க.அமலதாஸ் மங்கல விளக்கேற்றுவதையும் மாணவர்களின் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

# ஊடகத்துறை அமைச்சுப் பொறுப்பை ஜனாதிபதி மஹிந்த ஏற்கவில்லை

## அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

ஊடகத்துறை அமைச்சுப் பொறுப்பை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எடுத்துக் கொண்டதாக வெளியான தகவலில் எந்த விதமான உண்மையும் இல்லையென அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா இணையத்தளமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

புதிதாக வழங்கப்பட்டிருக்கும் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் தொழில் அபிவிருத்தி அமைச்சுடன் ஊடகத்துறை அமைச்சுப் பொறுப்பையும் தொடர்ந்து வகிக்குமாறு ஜனாதிபதி தன்னைக் கேட்டுக்கொண்டதாக அவர் கூறியுள்ளார்.

ஊடகத்துறை அமைச்சராகப் பதவிவகித்துக்கொண்டே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் தொழில் அபிவிருத்தி அமைச்சுப் பொறுப்பை பதவியேற்குமாறு ஒரு வாரத்துக்கு முன்னர் ஜனாதிபதி தன்னைக் கோரியிருந்ததாக யாப்பா தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு நிலையில் ஊடகத்துறை அமைச்சுப் பொறுப்பை ஜனாதிபதி பொறுப்பேற்றுவிட்டதாக செய்திகள் வெளியானமை குறித்து நான் ஆச்சரியமடைகிறேன் என அவர் அந்த இணையத்தளத்திடம் கூறினார்.

இதேவேளை அமைச்சர் டலஸ் அழகப்பெரும ஊடகத்துறை அமைச்சருக்கு எதிராக முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்தே அமைச்சரவையில் மாற்றம் செய்யப்பட்டதாக அந்த இணையத்தளச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது இவ்விதமிருக்க சிறிலங்கா கிரிக்கெட் இடைக்கால நிர்வாக சபையின் தலைவர் அர்ஜுன ரணதுங்கவுக்கு அமைச்சரவை அந்தஸ்தற்ற முக்கிய பொறுப்பொன்றை வழங்குவதற்கும் ஜனாதிபதி தீர்மானித்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ச-5)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரின் வேண்டுகோளிற்கிணங்க லங்காசித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் நிர்வாக புனரமைப்பு விடயம் தொடர்பான கலந்துரையாடல் லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளதால் இவற்றில் அக்கறையுள்ள D.A.M பட்டதாரிகள், பதிவு செய்யப்பட்ட பரம்பரை வைத்தியர்கள், மற்றும் வளர்ச்சியில் அக்கறைவுள்ள ஆதரவாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவ மாணவர் மன்றம் கேட்டுக்கொள்கின்றது. (ஓ)

## விண்ணப்பம் கோரல்

தேசிய மொழிகள் கல்வி மற்றும் மொழிப் பயிற்சி நிறுவனத்தின் ஊடாக அரச கரும மொழிகள் கொள்கையினை உரிய முறையில் செயற்படுத்தும் நோக்குடன் அரச சேவையில் உள்ள அலுவலர்களுக்கு சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பாடநெறிகளை பிரதேச மட்டங்களில் ஆரம்பிக்கும் பொருட்டு அவற்றை கற்பிக்கக் கூடிய நிறுவனங்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எனவே சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிக் கற்கை நெறிகளை மேற்கொள்ளவிரும்பும் அரச நிறுவனங்கள் விண்ணப்பப் படிவங்களை மாவட்ட செயலகத்தில் உதவி மாவட்ட செயலரிடம் பெற்று பணிப்பாளர் நாயகம், தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், கலேவத்தை, அகலவத்தை என்ற முகவரிக்கு 09.01.2009 இற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ச)

## பட்டாசு கொளுத்தி கொண்டாட்டம்

விடுதலைப் புலிகளிடமிருந்து கிளிநொச்சியை இராணுவத்தினர் மீட்டிருப்பதாக ஜனாதிபதி அறிவித்ததும் கொழும்பு உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் பட்டாசுகள் கொளுத்தி வெற்றி கொண்டாடப்பட்டது.

பிற்பகல் 4 மணியளவில் பிரதான வீதிகளில் சென்ற வாகனங்களை மறித்து பட்டாசுகள் கொளுத்தப்பட்டன. புறக் கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக மக்கள் கூடி பட்டாசுகளைக் கொளுத்தி வெற்றியைக் கொண்டாடினர்.

நுகேகொட பகுதியில் இளைஞர்கள் மோட்டார் சைக்கிள்களிலும் முச்சக்கர வண்டிகளிலும் தேசியக் கொடியைக் கட்டியவாறு பேரணி நடத்தியிருந்தனர்.

திருகோணமலையிலும் கிளிநொச்சியைக் கைப்பற்றியமை கொண்டாடப்பட்டுள்ளது. (ச-5)

# மோட்டார் வாகனப் பதிவிற்கு புகைப்படத்தினை சமர்ப்பித்தல்

(யாழ்ப்பாணம்)

2009ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதியிலிருந்து செயற்படும் வண்ணமாக வாகனத்தின் தெளிவான வர்ண புகைப்படம் இரண்டினை வாகனப் பதிவிற்கான விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். அதில் ஒன்று வாகனத்தின் முன் பகுதியை அடையாளப்படுத்தும் புகைப்படமாகவும் மற்றையது வாகனத்தின் இடம் அல்லது வலப் பக்கத்தை தெளிவாகக் காட்டக் கூடிய போஸ்காட் அளவிலான புகைப்படங்களாக இருத்தல் வேண்டும் என யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வ. பத்மநாதன் அறிவித்துள்ளார்.

இவ் புகைப்படங்களின் பின்புறத்தில் குறித்த வாகனத்தின் அடிச்சட்ட (செசி) இலக்கத்தினை சரியாக எழுதி குறித்த வாகனத்திற்குரிய சரியான அடிச்சட்ட இலக்கத்தினையுடைய வாகனத்தின் புகைப்படம் என்பதை உறுதிப்படுத்தி உரிமையாளர் கையொப்பமிட்டு தேசிய அடையாள அட்டையின் இலக்கத்தினையும் குறிப்பிடுதல் வேண்டும்.

**புகைப்படத்தினை உறுதிப்படுத்தும் மாதிரி**

இப் புகைப்படத்தின் பின்புறம் குறிப்பிடப்பட்டுள்ள அடிச்சட்ட (செசி) இல...............குறித்த வாகனத்திற்குரியது என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

தேசிய அடையாள அட்டை இல................................

.................................
ஒப்பம்

**GRADE 6TH to 9TH ENGLISH & TAMIL MEDIUM PERSONAL CLASSES**

ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்கள் கிழமை நாட்களில் 3 மணி முதலும் வார இறுதி நாட்களில் 8 மணி முதலும் கற்பிக்கப்படும்.

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இல.: 077-9748540 060-2218216

(2058)

**வியாழ மாற்றம்**
**பலாபலன்**

சோதிட ஞானி சண் மாஸ்ரர் ஆ.சண்முகலிங்கம் எழுதிய வியாழமாற்றம் (06.12.2008இல்) ஓராண்டுக்கான பலா பலன்கள் நூல் வெளிவந்து விட்டது.

12 ராசிகளுக்கும் பலன்கள்-சிறப்புப் பலன்கள் உள்ளன. யாழ்.நகர் எங்கும் கிடைக்கும். ரூ. 30/= சி.சி.ரி.எம். ஸ்கூல் லேன், கொக்குவில் மேற்கு. (2047)

# இன்று ஒரு தகவல்

## மகிழ்ச்சி இருக்கும் இடம்

வளமான மரங்கள் நிறைந்த ஒரு காடு. அங்கு ஒரு சாது இருந்தார்.

எப்பொழுதும் ஒரு மரத்தடியில் தான் உட்கார்ந்திருப்பார். அவருடைய இருப்பிடமே அது தான்.

அவர் மூன்று கற்களை வைத்திருந்தார். செங்கல் மாதிரி இருக்கும். ஆனால், அதைவிட கொஞ்சம் பெரிதாக இருக்கும்.

தூங்கும் போது ஒரு கல்லை தலைக்குக் கீழாகவும், இன்னொருகல்லைஇடுப்புக்குக் கீழாகவும் ,மற்றைய கல்லை காலுக்குக் கீழாகவும் வைத்துக் கொள்வார். பின்னர் உடம்பை ஒரு தகடால் மூடிக் கொண்டு தூங்கி விடுவார்.

மழை பெய்தாலும், உடம்பு நனையாது. மேலே தகடு இருப்பதால் மழையும் உடம்பில் படாது.

அவருடைய தூக்கமும் கெடாது.நிம்மதியாக தூங்குவார். பகலில் அந்த மூன்று கல்லையும் ஒரு அடுப்பு மாதிரி வைத்து அதன் மேல் உட்கார்ந்து கொள்வார். அதனால் பாம்பு, பூச்சி எதுவும்அவரை அண்டாது அவர் பாட்டுக்கு நிம்மதியாக இருப்பார்.

யாராவது எதையாவது கொண்டு வந்து கொடுத்தால் வாங்கிச் சாப்பிடுவார்.

ஒருநாள் அந்த நாட்டின் அரசன் காட்டுக்கு வேட்டையாட வந்தான். அந்த வழியாக வரும் போது இந்த சாது படுத்திருப்பதைப் பார்த்தான். பரிதாபப்பட்டான்.

''ஐயோ பாவம்... இந்தக் கல்லின் மேல் உடம்பை வைத்துக் கொண்டு தூங்குகிறாரே... என்ன பாடு படுவார்... இவரை நம் அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு போய் சுகமாக – நிம்மதியாக இருப்பதற்கு வழி செய்து கொடுத்தால் நன்றாக இருக்கும்" என்று நினைத்தான்.

அப்படி நினைத்துக் கொண்டே அரண்மனைக்கு வந்து விட்டான்.

பின்னர் ஒரு பல்லக்கையும் இரண்டு சேவகர்களையும் காட்டுக்கு அனுப்பி அந்த சாதுவை அழைத்து வரச் சொன்னார்.

இவர்கள் போய் அவரிடம் விவரத்தைச் சொன்னார்கள். "எனக்கெதற்குஅரண்மனை வாசம்?" என்றார் அவர்.

"இருந்தாலும் மன்னர் உத்தரவு... நீங்கள் அவசியம் வர வேண்டும்" என்றார்கள்.

இவரும் வேறு வழியில்லாமல் புறப்பட்டார். புறப்படும் போது மறக்காமல் அந்த மூன்று கற்களையும் தகடையும் எடுத்து பல்லக்கில் வைத்துக் கொண்டார்.

எதற்கு இதையெல்லாம் எடுத்து வைக்கிறார் என்று அவர்கள் யோசித்தார்கள். இருந்தாலும் அவரிடம் ஒன்றும் கேட்காமல் அரண்மனைக்கு அழைத்து வந்தார்கள்.

அரசன் வரவேற்றான். அறுசுவை உணவு படைத்தான். அவர் தூங்குவதற்கு தங்கக் கட்டிலும்,பட்டு மெத்தையும் ஏற்பாடு செய்தான்.

'இங்கே படுத்து ஓய்வு எடுங்கள்' என்று சொல்லி விட்டுப் போய்விட்டான்.

மறு நாள் காலையில் வந்து பார்த்தால், அந்தப்பட்டு மெத்தையின் மேல் மூன்று கல்லையும் வைத்து வழங்கம் போலவே படுத்திருந்தார் சாது.

இதைப் பார்த்த அரசனுக்கு அதிர்ச்சி!

"என்ன சுவாமி இப்படி?" என்றான்.

அதற்கு சாது, எனக்குத் தேவையும் இல்லை. குறையுமில்லை. எல்லா இடத்திலும் எனக்கு ஒரேமகிழ்ச்சிதான்" என்றார்.

மகிழ்ச்சி என்பது தங்கக் கட்டிலிலோ, பட்டு மெத்தையிலோ இருக்கும் விஷயம் இல்லை.

அது மனதில் உள்ள விஷயம்.

'உண்மையான மகிழ்ச்சிக்கு வழி மனப் பக்கவம்' என்பது அந்த அரசனுக்குப் புரிந்தது.

இந்தக்கால சாமியார் ஒருவர் இருந்தார். அவரைத் தேடிஒரு சீடன் வந்தான்.

"சுவாமி... எனக்கு நிம்மதி வேண்டும். அதற்கு என்ன வழி?" என்று கேட்டான்.

சாமியார்நிமிர்ந்து பார்த்தார். பின்னர், "நீ பல பேரிடம் கடன் வாங்கியிருக்கிறாய். அதையெல்லாம் திருப்பிக் கொடுத்தால் தான், உனக்கு நிம்மதி கிடைக்கும்!" என்றார்.

இவனுக்கோ ஆச்சரியம்.

'அது எப்படிசாமி... அவ்வளவு கரெக்டா நான் கடன் வாங்கியதை கண்டு பிடித்தீர்கள்" என்றான்.

"உனக்குக் கடன் கொடுத்தே சாமியாராகிப் போன எத்தனையோ பேரில் நானும் ஒருவன்தான்டா! என்னிடமே வந்து நிம்மதிக்கு வழி கேட்கிறாயே...அது தான்டா வேதனை!" என்றார்அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருபவர்களை பார்வையிட அனுமதி மறுப்பு

## மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறையீடு

(கொழும்பு)

வவுனியா பிரதேசத்தில் இரண்டு வெவ்வேறு சம்பவங்களில் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் தமது குடும்ப உறவினர்களைப் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் ஒருவரின் தந்தையும் வேறொருவரின் மனைவியும் முறையிட்டுள்ளார்கள்.

வவுனியா மணிபுரம் பகுதியில் விறகு வெட்டிக் கொண்டு திரும்பி வந்து கொண்டிருந்த போது இடம் பெற்ற கிளைமோர் கண்ணிவெடி தாக்குதலில் காயமடைந்து கொழும்புத் தேசிய வைத்தியசாலைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதனது கணவனைப் பார்வையிட தனக்கு அனுமதி மறுக்கப்பட்டதாகஅவரது மனைவி வவுனியா மனித உரிமைகள் ஆணைக் குழுவினரிடம் முறையிட்டுள்ளார்.

கடந்த மாத இறுதியில் இடம் பெற்ற இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்த தனது கணவன் அனுராதபுரம் வைத்திய சாலையில் இருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அவரைப் பார்ப்பதற்காக அங்கு சென்ற தனக்கு அனுமதிவழங்கப்படவில்லை என காயமடைந்தவரின் மனைவி ஜி.சியாமளா தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் பிரதேசமாகிய வன்னிப் பகுதியில் இருந்து 46 பேரில் ஒருவராக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குப் பாதுகாப்புத் தேடி வந்த போதுகாட்டில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்திய சாலையில் மேல் சிகிச்சை பெற்று வரும் தனது மகனைப் பார்வையிடுவதற்குப் அங்கு கடமையில் உள்ள பாதுகாப்புப் பிரிவினர் தனக்கு அனுமதி வழங்கவில்லை என அவரது தந்தையார் ப. குணபாலன் மனித உரிமைகள் ஆணைக்குழுவினரிடம் முறையிட்டுள்ளார்.

இந்த முறைப்பாடுகள் தொடர்பாக தமது தலைமை அலுவலகத்தின் கவனத்திற்குக் கொண்வந்துள்ளதாக வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலக இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## கோப்பாய் –கைதடி வீதி பொதுமக்கள் பாவனைக்கு நேற்று திறக்கப்பட்டுள்ளது

(கோப்பாய்)

கோப்பாய்- கைதடி வீதி பொதுமக்கள் பாவனைக்காக நேற்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு ஆகட்ஸ் இடம் பெற்ற அசாதாரண சூழ்நிலை காரணமாக மூடப்பட்டிருந்த மேற்படி பாதை தென்மராட்சிக்கும் வலி காமத்திற்கும் இடையே உள்ள மிகக் குறுகிய தூரப் பாதை யாகும். இந்தப் பதை திறக்கப்பட்டுள்ளதால் இரண்டு பிரதேச மக்களும் பயன் அடைந்துள்ள இப் பிரதேச மக்கள் மிகவும் குதூகலத்துடன் சென்று வருவதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. (ஓ- 4)

## இராசி பலன்

03.01.2009
(மார்கழி 19, சனிக்கிழமை
பூரட்டாதி காலை6.53 மணிவரை
ஸப்தமி பின்னிரவு 1.09மணிவரை
இராகுகாலம்-9.31-11.01 மணிவரை
சுபநேரம்-3.31-5.01 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | காரிய அலைச்சல், வீண் மனஸ்தாபம், சுபசெலவு, சயன சுகக் குறைவு. |
| இடபம் | பொருள் சேர்க்கை,தெய்வ தரிசனம்,எடுத்த காரியம்கை கூடும்,பெருமையடைதல். |
| மிதுனம் | கீர்த்தி,உறவினர் கலந்துரையாடல், கடினஉழைப்பு,தெய்வ தரிசனம். |
| கடகம் | புதிய முயற்சி,தந்தை வழியுறவு,தெய்வ சிந்தை,கட்டுப்பாடு. |
| சிங்கம் | காரிய தடங்கல்,போசன சுகம், பிரயாணம்,அபகீர்த்தி. |
| கன்னி | செல்வாக்கு,தொழில் நன்மை, தெய்வதரிசனம்,எடுத்த காரியம் கைகூடும். |
| துலாம் | தேகநலன்,சுப நிகழ்வு,காரிய அனுகூலம்,பகைவர் நேசம். |
| விருச்சிகம் | மனக் கிலேசம்,பணக் குறைவு, வியாபார விருத்தி, சொத்துப் பிணக்கு. |
| தனுசு | கல்வியில் ஆர்வம்,முயற்சி தாமதம்சுபசெலவு,ஆரோக்கியக் குறைவு. |
| மகரம் | தனவருவாய்,காரிய நன்மை , தொழில் முன்னேற்றம், உறவினர் உதவி. |
| கும்பம் | பண விரயம்,நிலை மாற்றம், காரிய தடங்கல், கோபப்படுதல். |
| மீனம் | கற்பனை மிகுதி, தெய்வ சிந்தை, நல்ல முயற்சி, நண்பர்கள் சந்திப்பு . |

வளவன்

## யாழ். குடாநாட்டு சந்தைகளில் மரக்கறி வகைகளின் விலைகள்

| | மருதனார்மடம் | சுன்னாகம் | திருநெல்வேலி |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 500 | 450 | 400 |
| உருளைக்கிழங்கு | 260 | 250 | 220 |
| பச்சைமிளகாய் | 700 | 600 | 600 |
| தக்காளி | 450 | 600 | 600 |
| அவரை | 200 | -- | -- |
| மரவெள்ளிகிழங்கு | 70 | 80 | 70 |
| கோவா | 180 | 160 | 120 |
| கரட் | 120 | 120 | 160 |
| பூசணி | 100 | 100 | 80 |
| புடோல் | 140 | 110 | 160 |
| வாழைக்காய் | 120 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 110 |
| பெரிய வெங்காயம் | 300 | -- | -- |
| பாகற்காய் | 350 | 300 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 120 |
| கரணைக் கிழங்கு | 50 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 200 | 300 | 280 |
| லீக்ஸ் | 220 | 300 | 250 |
| தேங்காய் | 40 | 45 | 40 |
| கீரை | 40 | 40 | 50 |
| போஞ்சி | -- | -- | 520 |
| தேசிக்காய் | 80 | 100 | 80 |

(ஓ-9-10)



வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வில் சங்கானை உப அலுவலக பொறுப் பதிகாரி க. மோகனராஜ்குமார் வட்டுக்கோட்டை கண்ணகை அம்மன் ஆலய அறநெறிப் பாடசாலை மற்றும் யாழ்ப்பாணக் கல்லூரி மாணவன் பி. பிரணவ சுதனை பாராட்டி கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

## யாழில் நெல்விளைச்சல் பாதிக்கப்படும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலிகாமம், வடமராட்சி போன்ற பகுதிகளில் நெல்விளைச்சல் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாக யாழ் திருநெல்வேலி வளிமண்டல ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

2008ஆம் ஆண்டு மழையானது காலந் தவறிப் பெய்தமையே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்ற வருடத்திற்கான மொத்த மழைவீழ்ச்சி 1811.8mm ஆகக் காணப்பட்ட அதேவேளை மார்கழி மாத மழை வீழ்ச்சி 184.5mm ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மார்கழி மாதத்திற்கான சராசரி மழை வீழ்ச்சி 278.2mm ஆகக் காணப்படும் அதே வேளை சென்றவருட மார்கழி மாத மழை வீழ்ச்சி இதைவிட குறைவாகக் காணப்பட்டமையும் நெல் விளைச்சலில் பாதிப்பை ஏற்படுத்துவதாகத் தெரிவித்துள்ளது.

மேலும் ஒரு வாரத்திற்கு மப்பும், வெய்யிலும் மாறிமாறி ஏற்படும் தன்மை காணப்படுவதாகவும் சீரான காலநிலை ஏற்படுவதற்கு இன்னும் சில வாரங்கள் செல்லும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-9-10)

## உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

றுகுணு கப்பல் மூலம் யாழ் . மாவட்டத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ள உருளைக்கிழங்கு , பெரிய வெங்காயம் ஆகியன மாவட்டத்திலுள்ள 24 ப.நோ.கூ.சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் எடுத்து வரப்பட்ட உருளைக்கிழங்கும் பெரிய வெங்காயமும் விநியோக விபரம் வருமாறு,

| அங்கத்தவர் | விநியோக அளவுகிலோ கிராம் | |
|---|---|---|
| | உருளைக்கிழங்கு | பெரிய வெங்காயம் |
| 1அங்கத்தவர் | 250கிராம் | 200 கிராம் |
| 2,3அங்கத்தவர் | 500கிராம் | 250 கிராம் |
| 4அங்கத்தவர் | 1கிலோ | 300 கிராம் |
| 5 ம் அதற்கு மேல் உள்ள அங்கத்தவர் | 1.250கிலோ கிராம் | 350 கிராம் |

ஒரு கிலோ கிராம் உருளைக்கிழங்கின் ப.நோ.கூ.சங்கங்களின் விற்பனை விலை ரூபா-77ஆகவும் ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயத்தின் ப.நோ.கூ.சங்கங்களின் விற்பனை விலை 83 ரூபா ஆகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி விநியோக நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யுமாறு பிரதேச செயலர்கள்/ உதவி அரசாங்க அதிபர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகியோருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது என அரசாங்க அதிபர் அறியத்தந்துள்ளார். (ஓ)

## ஹொக்கி சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம்

(வட்டுக்கோட்டை)

யாழ் .மாவட்ட ஹொக்கி சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 4.00 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் அனைத்து நிர்வாக சபை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளு மாறு யாழ் மாவட்ட ஹொக்கி சங்க செயலாளர் இ.குகன் கேட்டுள்ளார். (ஓ-27)

## கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி முடிவுகள்

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சுற்று போட்டியின் முதல் சுற்று ஆட்டங்களின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் கே.சி.சி.சி.வி.க எதிர் சென்ற லைட்ஸ் சொக்ஸ் வி.க இடையிலான போட்டியில் முதல் காற்பகுதியில் 09:21 புள்ளி களும், 2-வது காற்பகுதியில் 30: 34 புள்ளி களும், 3ஆவது காற்பகுதியில் 40:59 புள்ளிகளும் இறுதியாட் டத்தில் 52:86 புள்ளிகளும் பெற்று சென்றலைட்ஸ் சொக்ஸ் வி.க வெற்றி பெற்றது.

அடுத்து சென்றலைட்ஸ் புளுஸ் வி.க.எதிர் சென்ரல் வி.க இடையிலான போட்டியில் முதற் காற்பகுதியில் 15 :05 புள்ளிகளும்,இரண்டாவது காற்பகுதியில் 27:09 புள்ளிகளும், மூன்றாவது காற்பகுதியில் 33:15 புள்ளிகளும் இறுதியாட்டத்தில் 48:24 புள்ளிகளும் பெற்று சென்றலைட்ஸ் புளுஸ் வி.க வெற்றி பெற்றது.

ஜொலிஸ்ரார் வி.க. எதிர் ஓல்ட் கோல்ட் வி.க Bஅணிகளுக்கிடையிலான மற்றுமொரு போட்டி முதற் காற்பகுதியில் 20:5புள்ளிகளும் இரண்டாவது காற்பகுதியில் 49:15 புள்ளிகளும் மூன்றாவது காற்பகுதியில் 63:17 புள்ளிகளும் இறுதியாட்டத்தில் 77:19 என்ற புள்ளிகளும் பெற்று ஜொலிஸ் ரார் வி .க வெற்றிபெற்றது. (ஓ-6)

## அச்சுவேலி கால்நடைப் பண்ணையில் கோழிக் குஞ்சுகள் விற்பனை

(யாழ்ப்பாணம்)

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினது அச்சுவேலி பிராந்திய கால்நடைப் பண்ணையில் பின்வரும் விபரமுடைய கலப்பின கொல்லப்புற கோழிக்குஞ்சுகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வவுனியா, திருகோணமலை மாவட்டங்களினது விலையிலே விற்பனைக்குள்ளன.

தேவையான பண்ணையாளர்கள் கைத்தொழில்பேட்டை வீதி, அச்சுவேலியில் அமைந்துள்ள திணைக்களப் பண்ணையில் நேரடியாகவோ அல்லது 060-2211366 இலக்க தொலைபேசி மூலமோ உடனடியாக தொடர்பு கொண்டு வேண்டிய கோழிக் குஞ்சுகளைப் பெற்றுக்கொள் ளுமாறு திணைக்கள உதவிப் பணிப்பாளர் வடக்கு டாக்டர் திருமதி வ. அமிர்தலிங்கம் கேட்டுக் கொள்கின்றார். விற்பனைக்குள்ள குஞ்சுகளின் விலை விபரம் வருமாறு,

ஒருநாள் குஞ்சுகள் ரூபா 60.00,ஒரு கிழமைக்குஞ்சுகள் ரூபா 70.0, இரு கிழமைக் குஞ்சுகள் ரூபா 80.00,மூன்று கிழமைக் குஞ்சுகள் ரூபா 100.00, நான்கு கிழமைக் குஞ்சுகள் ரூபா 130.00, ஐந்து கிழமைக் குஞ்சுகள் 160.00, ஆறு கிழமைக்குஞ்சுகள் ரூபா 190.00, ஏழு கிழமைக்குஞ்சுகள் ரூபா 220.00, எட்டு கிழமைக்குஞ்சுகள் ரூபா 260.00 (ஓ)

## மாதர் அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு

(இருபாலை)

இருபாலை தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் தலைவராக சேயோன் ஸ்ரீ தேவி, உபதலைவராக ரவீந்திரராசா ஜீவராணி, செயலாளராக நவரத்தினம் றஜீனா, உபசெயலாளராக சரவணபவன் நகுலேஸ்வரி, பொருளாளராக சிவலிங்கம் தர்சினி ஆகியோரும் செயற்குழு உறுப்பினர்களாக உ.பர்மிலா, ஜெ. வளர்மதி, சி.அனுஷா, த. சறோஜா - றெ.சர்மிலா, ம.தனுஷா, தோ.குமுதினி, ஜெ.மங்களேஸ்வரி கணக்காய்வாளராக சி. றஞ்சனாதேவி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஓ-134)

## குடாநாட்டில் தங்கவைக்கப்பட்டிருக்கும் வன்னி மக்களுக்கு இடப்பற்றாக்குறை

வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தங்கவைக்கப்பட்டிருப்பவர்களுக்குப் போதியளவு இடவசதி இல்லையென பிரதேச செயலக உயர்மட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வன்னியிலிருந்து இடம் பெயர்ந்த 60 குடும்பங்களைச் சேர்ந்த 155 பேர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தங்க வைக்கப்பட்டிருப்பதாகவும், இவர்கள் தங்குவதற்கு அங்கு ஒரு பகுதி மாத்திரமே ஒதுக்கிக் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். ஆசிரியர் கலாசாலையின் பணிகளும் தொடர்ந்து நடைபெற்றுவரும் நிலையில் இடம் பெயர்ந்த மக்களை அங்கு தங்கவைத் திருப்பதால் போதியளவு இடமில்லையென அவர் தெரிவித்துள்ளார்.

அங்கு தங்கியிருக்கும் மக்களுக்கு வயது வேறு பாடின்றி தினமும் மூன்று வேளையும் 250 ரூபா பெறுமதியான சமைத்த உணவு பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டு வருவதாகவும் அம்மக்களுக்கான வைத்திய சேவைகள் சுகாதார அமைச்சினால் நேரடியாக வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ஓ-6)




'நிஷா' புயல் வெள்ள அனர்த்தத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வலிகாமம் கிழக்கு மக்களுக்காக எழுபத்தையாயிரம் ரூபா பெறுமதியான மருந்து வகைகளைக் கொண்ட பொதிகளை கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் லயன்ஸ் கழக மாவட்ட சுகாதார இணைப்பாளர் வைத்திய கலாநிதி லயன்வை தியாகராஜா கோப்பாய் மாவட்ட வைத்திய அதிகாரி திருமதி லக்ஸ்மனிடம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.




## வாக்காளர் பட்டியல் பார்வையிடல்

(நல்லூர்)

தேர்தல் திணைக்களத்தினால் புதிதாக அனுப்பப்பட்ட வாக்காளர் பட்டியலில் நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் வாக்காளர் பட்டியல் நல்லூர் பிரதேச சபையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும் பொது மக்கள் அவற்றை அலுவலக நேரத்தில் பார்வையிடலாம் எனவும் நல்லூர் பிரதேச சபை செயலாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அவற்றில் ஏதாவது மாற்றம் செய்யவேண்டியிருப்பின் நல்லூர் பிரதேச ச பை பயி னூடாகவே மேற் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (ஓ-10)

## பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் எதிர் வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் கீ. ஏ. மோகன்ராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ-134)

## கண்காட்சியும் சான்றிதழ் வழங்கலும்

(அல்வாய்)

வடமராட்சி வலய முறைசாராக் கல்விப் பிரிவின் அனுசரணையுடன் யா/ கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலையின் முறைசாராக் கல்விப்பிரிவு நடத்தும் மனை முகாமைத்துவ தொழிற்பயிற்சி நெறிக் கண்ளகாட்சியும், சான்றிதழ் வழங்கலும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் பா.வெற்றிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பருத்தித்துறை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.தபேந்திரராஜா, முறைசாராப் பிரிவின் செயற்திட்ட அலுவலர் அம்பிகைபாகன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-4-19)

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மேற்கு சிறுப்பிட்டி அரிய நாயகன் புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிமுதல் மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகம் முற்றோதல் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அரியநாயகன் புலம் மாணிக்கவாசக மடாலய சபையினர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். அடியார்கள் அனைவரும் கலந்து பாக்களைப் பாடியும், கேட்டும் அருள்பெறுமாறு ஆலய பரிபாலகர்கள் கேட்டுக்கொள்கின்றனர். (ஓ)

## மருத்துவபீட மாணவர்களுக்கான விடுதிக் கட்டடம் அமைக்க ரூபா 208 மில்லியன் ஒதுக்கீடு

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு விடுதிக் கட்டடங்களை அமைப்பதற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு இருநூற்றியெட்டு (208) மில்லியன் ரூபாய்களை ஒதுக்கியுள்ளது. இக்கஷ்டங்கள் மருத்துவ பீடத்திற்கு அருகில் அமைக்கப்படவுள்ளது.

ஐந்து மாடிகளைக் கொண்ட இவ்விடுதிக் கட்டடங்களை அமைப்பதற்கு தனியார் ஒப்பந்தகாரரிடமிருந்து உயர்கல்வி அமைச்சு கேள்விகளைக் கோரியுள்ளது. தகுதிகான் ஒப்பந்தங்கள் தமது கேள்விகளை இம்மாதம் இருபத்தோராம் திகதிக்குள் சமர்ப்பிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இருபத்தைந்து வருடமாக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களுக்கு விடுதி வசதியின்மை புதிய விடுதிக் கட்டிட நிர்மானத்துக்குப்பின் முழுமையாக நீங்கும் என தெரிவிக்கப்படுகின்றது. (ஓ- 134)

# இலங்கையில் தமிழர் 29

## ஆதி இரும்புக் காலம்

தற்பொழுது கிடைக்கும் சான்றுகளின் அடிப்படையில் தென்னிந்தியத் தீபகற்பத்தில் இப் புதிய பண்பாடு இற்றைக்கு 3200 ஆண்டுகளுக்கு முன் முதன் முறையாகக் காணப்படுகின்றது எனலாம். எங்கிருந்து இப் பண்பாடு தென்னிந்தியத் தீபகற்பத்துக்குப் பரவியது என்ற வினாவுக்கோ, எவ் வழியாக வந்தது என்ற வினாவுக்கோ தெளிவான பதில் கொடுக்கத் தற்பொழுது சான்றில்லை.

தீபகற்பத்தின் வடமேற்குத் தக்கிணத்தில் (மஹாராஷ்டிரா) முதல் பரவி, அங்கிருந்து இது தென் தக்கிணத்துக்கு (கர்நாடக மாநிலம்) பரவியது என்றே தற்பொழுது கூற முடிகின்றது.

அது பின்னர் கிருஷ்ணா நதிக்கரையோரமாக ஆந்திரப் பிரதேசத்துக்குள் சென்று, கிழக்குக் கரையை அடைந்தது. பின்னர் கோதாவரி மற்றும் பெண்ணாறு வழியாகத் தென் பகுதிகளுக்கும் பரவியது. இந்தப் பண்பாடு: ஆதி இரும்புக் காலத்தில் தென்னிந்தியாவில் பரவிய வரலாற்றில் கர்நாடகப் பகுதி மிக முக்கியமான ஒரு பங்கை வகிக்கின்றது. கர்நாடகத்திலிருந்தே ஆந்திரத்துக்கும் தமிழ் நாட்டுக்கும் இப் பண்பாடு பரவியது. பின்னர், தமிழ்நாட்டிலிருந்து அது இலங்கைக்குப் பரவியது.

### தமிழ் நாட்டில் ஆதி இரும்புக் காலம்

ஆதி இரும்புக் காலப் பண்பாடு தென் கர்நாடகத்திலிருந்து தமிழ்நாட்டுக்கும் கேரளத்துக்கும் பரவியது. தென் கர்நாடகத்தில் பெங்களூர் மற்றும் கோலார் மாவட்டங்களில் பெருந்தொகையான ஆதி இரும்புக் காலச் சவ அடக்கங்கள் உள்ளன. அவை வெளிப்படுத்தும் பண்பாட்டின் பரம்பலாகவே கிழக்கே தமிழ் நாட்டின் வடபகுதியில் தர்மபுரி மாவட்டத்திலும் வட ஆற்காட்டிலும் உள்ள சவ அடக்கங்களைக் கருதவேண்டும். இவை பொன்னையாறு, பாலாறு, காவேரி ஆகிய நதிகளின் கரையை அடுத்துக் காணப்படுகின்றன.

இந்த நதிகள் தென் கர்நாடகத்திலிருந்து தமிழ்நாட்டை நோக்கிப் பாய்கின்றன. ஆகவே, இந் நதிகள் வழியாகத் தென் கர்நாடகத்திலிருந்து புதிய பண்பாடு,காவேரி ஆகிய நதிகளின் கரையை அடுத்துக் காணப்படுகின்றன. இந்த நதிகள் வழியாக தென் கர்நாடகத்திலிருந்து புதிய பண்பாடு தமிழ்நாட்டுக்குள் பரவிய முறையை இலகுவில் புரிந்து கொள்ளலாம்.

வட தமிழ்நாட்டின் வளம் மிகுந்த நிலப் பகுதியிலிருந்து புதிய பண்பாடு நதிகளின் கரை வழியே தென் தமிழ்நாட்டுக்கும் பரவியது. சேலம் மாவட்டத்திலிருந்து வடக்கு நோக்கித் தென் ஆற்காடு மற்றும் செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் புதிய பண்பாட்டின் பரம்பலைக் காணலாம். சுருங்கக் கூறின், மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிப் பாயும் பெருநதிகள் வழியே புதிய பண்பாடு கர்நாடகத்தின் தென் பகுதியிலிருந்து தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்குப் பரவியது.

தமிழ்நாட்டின் பெருநதிகளான காவேரி, பாலாறு, பொன்னையாறு,தாமிரபரணி ஆறு ஆகியவை வளம்படுத்தும் நிலப் பகுதிகளில் புதிய பண்பாடு வேரூன்றியது. இந்நதிகள் கர்நாடகத்திலிருந்து தமிழ்நாட்டை வந்தடைகின்ற உயர் நிலங்களை அடுத்த இடங்களில் புதிய பண்பாட்டுக்குரிய தொல்லியல் சான்றுகள் கூடுதலாகக் காணப்படுகின்றன. இதனால் கர்நாடகத்திலிருந்து புதிய பண்பாடு அங்கு பரவியமை தெளிவாகின்றது. தமிழ் நாட்டின் கிழக்குப் பகுதியிலுள்ள தாழ் நிலங்களில் புதிய பண்பாட்டுக்குரிய சான்றுகள் வளம் நிறைந்த நதிக்கரைகளில் அல்லது நீர்ப்பாசனக் குளங்களுக்கு அருகில் காணப்படுவது கவனிக்கத்தக்கது. தாழி அடக்கங்கள் (urns) மற்றும் கல்வட்ட அடக்கங்கள் (stone circles) ஆகியவை பொதுவாக நெற்பயிர்ச் செய்கைக்கு உகந்த நிலப்பகுதிகளில் காணப்படுவதை ஆய்வாளர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆதி இரும்புக் காலப் பண்பாடு இலங்கைக்குத் தென் தமிழ்நாட்டிலிருந்து வந்தது என்பதில் ஐயமில்லை. அகத்தியர்மலைப் பகுதியிலிருந்து இப்பண்பாடு வைப்பாறு, வைகை, சிற்றாறு, தாமிரபரணி ஆகிய நதிகளின் ஓரமாகத் தமிழ்நாட்டின் தென்கிழக்குக் கரையை வந்தடைந்தது. வாசுதேவ நல்லூர் மற்றும் ஆதிச்சநல்லூர், வைகை நதிச் சமவெளி ஆகிய இடங்களை வந்தடைந்தது, தொடர்ந்து இலங்கையை நோக்கி இப் பண்பாடு பரவுவது திண்ணமாகியது.

தமிழ் நாட்டின் தென் பகுதியில் காணப்படும் ஆதி இரும்புக் காலத் தொல்லியல் தலங்களை நோக்கினால், புதிய பண்பாடு எவ்வழிகளால் தென்கிழக்கு நோக்கிப் பரவி இறுதியில் தாமிரபரணி, சிற்றாறு மற்றும் வைப்பாறு ஆகியவற்றின் கழிமுகப் பகுதியை வந்தடைந்தது என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

சிற்றாறு தமிழ்நாட்டுக்குள் பாயத் தொடங்கும் மேல் மலைப் பகுதியை நோக்கினால், இலஞ்சி மற்றும் குற்றாலம் ஆகிய இடங்களில் தாழி அடக்கங்கள் காணப்படுகின்றன. குற்றாலத்தில் தாழிகளுடன் கற்படுக்கை (cairns) களும் காணப்படுகின்றன. வைப்பாறு பாயத் தொடங்கும் மேல் மலைப் பகுதியில் சிவகிரி, பனையூர் மற்றும் வாசுதேவ நல்லூர் ஆகிய இடங்களில் தாழி அடக்கங்கள் உள்ளன. அகத்திய மலையின் அடிவாரத்தில் தாமிரபரணியின் மேல் பகுதி யில், சிவசைலம் தாழி அடக்கங்கள் காணப்படும் ஒரு முக்கியமான தொல்லியல் தலமாக அமைகின்றது. தாமிரபரணி ஆறு தென் கிழக்கு நோக்கிப் பாம்பன் கரையை அடையும் வழியில் தமிழ்நாட்டின் பிரசித்தி பெற்ற ஆதி இரும்புக்காலத் தொல்லியல் தலமாகிய ஆதிச்சநல்லூர் இருக்கின்றது. இத்தலமும் அருகாமையிலுள்ள பெரும்பயிர் (Perumbair) தலமும் 1870 களிலே முதன் முறையாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. (தொடரும்)

பேராசிரியர்
கா. இந்திரபாலா



இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தின் யாழ். கிளையில் நடைபெற்ற புது வருட ஆரம்ப நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் சிவஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பராமாச்சார்ய சுவாமிகள் மங்கல விளக்கேற்றுவதையும், அதிவண பிலேந்திரன் அடிகளார், நிர்வாக உத்தியோகத்தர் அ.சுபேசன் ஆகியோர் உரையாற்றுவதையும், இலங்கையின் காப்புறுதியின் அதி உயர் விருதான எம்.டி.ஆர்.ரி.விருதினைப் பெற்ற திரு எ.சிவகாந்தா, வி.நந்தகுமார் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: கோபி)

# இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகால தமிழ்ப் பத்திரிகைகளும் - யாழ்ப்பாணமும் 4

இப் பத்திரிகையில், 'ஆரியர்' என்ற பதத்திற்குப் புறம்பாகத் தமிழ் மக்களின் புராதனப் பெருமை மிக்க நாகரிகமாக திராவிட நாகரிகமும் தமிழ்மொழியும் கொள்ளப்பட்ட ஒரு வேளையில் இது தென்னிந்திய இலங்கைத் தமிழர்களைக் குறிக்கும் வகையில் தெரிவு செய்யப்பட்டிருக்கலாம்.

இதே காலப் பகுதியில் 1893 ஆம் ஆண்டிலிருந்து பிரெஞ்சு இந்தியாவின் காரைக்காலிலிருந்து '*திராவிட மந்திரி*' (The Tamil Counselor) என்ற ஒரு பத்திரிகையும் வெளிவந்தது. இதேபோன்று சென்னையை முகவரியாகக் கொண்டு '*ஆரியர் ஜனப்பிரியன்*' (Aryajanapriya) என்ற பத்திரிகை 1895 இல் வெளியிடப்பட்டிருந்தமையும். இங்கு சொல்லப்பட்ட கருத்துக்கு வலுச் சேர்ப்பனவாயுள்ளன. திராவிட கோகிலம் பத்திரிகை, மாதம் மும்முறை வெளியிடப்பட்டிருந்தது.

கல்லடி வேலுப்பிள்ளையார் நடத்தப்பட்ட '*சுதேச நாட்டியம்*' என்ற பத்திரிகை 1902 ஆம் ஆண்டு தொடக்கம் பிரசுரமாகத் தொடங்கியது. இது யாழ்ப்பாணத்தவர்களின் சுதேச அபிப்பிராயத்தை வெளிப்படுத்தும் எண்ணம் கொண்டதாய் (The Jaffna Native Opinion) என்ற ஆங்கிலப் பெயரைக் கொண்டு வெளிவந்தது. '*கல்லடிவேலன்*' என அக்காலத்தைய சாதாரண மக்களுக்கு நன்கு அறியப்பட்ட ஒருவராக இருந்தவர் கல்லடி வேலுப்பிள்ளை. இவர் ஆசுகவி எனவும் அறியப்பட்டிருந்தார். மக்கள் மத்தியில் இவரது சிலேடை ஆற்றலும், கவிதைகளும் பரவியிருந்தன.

அச்சுக்கலையைச் சற்று வித்தியாசமானமுறையில் கையாண்டவர் என்பது சமூக விடயங்களில் நரஸ்துதிக்கும், நரநிந்தனைக்கும் சற்றுத் துணிச்சலோடு அதனைப் பயன்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் வயாவிளானில் சொந்தமாக அச்சியந்திரசாலை ஒன்றை வைத்திருந்ததோடு பத்திரிகைகளையும்,ஏனைய பலநூல்களையும் ஆக்கி, அச்சிட்டு வெளியிட்டிருந்தார். '*யாழ்ப்பாண வைபவ கௌமுதி*' (1931) என்ற அவரது நூல் பலராலும் அறியப்பட்ட ஒன்றாகும்.

அக்காலத்தில், தமக்குப் பிடித்த விடயங்களையும், பிடிக்காத விடயங்களை யும் எழுதி, அச்சிற் பதித்து வெளியிட்டுள்ள தையும் அறிய முடிகிறது. அத்தகைய வெளியீடுகளுள் *அழகம்மா கும்மி*, *இரகசிய நூல்* என்பவை குறிப்பிடத்தக்கவை.

கல்லடி வேலனின் '*சுதேச நாட்டியம்*' பத்திரிகை நீண்டகாலம் தொடர்ந்து வெளிவந்த ஒரு பத்திரிகையாகவும் இருந்துள்ளது. அவர் சிறை இருந்த காலத்திலும், பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்தது. அக்காலத்தில் அவரின் கீழ் பத்திரிகையில் பணியாற்றிய நல்லதம்பி என்பவர் பத்திரிகையைத் தொடர்ந்து நடத்தியிருந்தார்.

அவரது பத்திரிகைகளில் சில பிரதிகளை மட்டுமே இன்று பெறக் கூடியதாக உள்ளது. அவற்றில் மொழியை மிகவும் சுட்டிப்பான முறையில் பயன்படுத்தியிருப்பதையும்,பிறவிதமாகப் பயன்படுத்தியிருப்பதையும் காணலாம்.

அவரது பத்திரிகையில் காலனித்துவ அதிகாரிகளையும்,அக்கால சமூக நிறுவனங்கள்,பிரமுகர்கள் ஆகியோரையும் பற்றிய செய்திகளில் இப் பண்பு இழையோடியிருப்பதைக் காணலாம். பத்திரிகைகளில் அவரது கவிதைகள் பிரசுரமாகியிருந்தன. இரண்டாவது இதழில் வந்த தொடக்கக் கவிதை இவ்வாறு உள்ளது.

*சுகந்தா நிதியந்தா தூய திடநெஞ்*
*சகந்தா செய கந்தா வையா-செகந்தாவி*
*யாடுமயி லேறிவிழை யாடசுர ரோடு சம*
*ராடுகுக வாறுமுக வா*

1902ஆம் ஆண்டில் இருந்து, '*விவேகானந்தன்*' (The Vivekaananda) என்ற பத்திரிகை வெளியிடப்படத் தொடங்கியிருந்தது.

இதன் முதலாம் பக்கமும், நான் காம் பக்கமும் ஆங்கிலத்திலும், இரண்டாம், மூன்றாம் பக்கங்கள் தமிழிலும் விடயங்களைத் தாங்கியவையாக அமைந்துள்ளன. விவேகானந்தரின் போதனைகளால் ஊக்கம் பெற்றவர்கள், யாழ்ப்பாணத்திலும் விவேகானந்த சபையை நிறுவியதுடன், பாடசாலை, அச்சுயந்திரசாலை ஆகியவற்றையும் ஆரம்பித்திருந்தனர்.

திருமதி சோ. கிருஷ்ணகுமார்
சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

'*சைவ சூக்குமார்த்த போதினி*' என்ற பத்திரிகை மாசமொருமுறை சுக்கிரவாரத்தில் வெளியிடப்பட்டது.

இப்பத்திரிகை வேலணை யில் இருந்து வெளியிடப்பட்டது. வேலணை மேற்கு, ஊர்காவற்றுறை,முகவரியில் அமைந் திருந்த சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியராகப் பணிபுரிந்த செ.கனக சபாபதிப் பிள்ளை என்பவரால் இப்பத்திரிகை நடத்தப்பட்டது. (தொடரும்)

# 2009 ஆம் ஆண்டு உங்களுக்கு எப்படி?

## துலாம்

2009 ஆம் ஆண்டில் துலாம் ராசிக் காரர்கள் நோய்த் தொந்தரவுகளில் இருந்து விடுபடுவீர்கள். 'எந்த நேரம் மருத்துவச் செலவுகள் ஏற்பட்டு காலை வாரிவிடுமோ...?' என்று அச்சப்பட்ட நீங்கள், தேக ஆராக்கியம் தேறி மகிழ்ச்சியாக வலம் வருவீர்கள். இழந்த கைப்பொருளை மீட்பீர்கள். முந்தைய காலத்தில் திருட்டு போன உங்கள் பொருட்கள் மீண்டும் திரும்பக் கிடைக்கும். செய்யும் தொழிலில் ஸ்திரத்தன்மை ஏற்படும். சுக சௌகர்யங்கள் உண்டாகும். பல நாட்களாக ஓரம் கட்டி வைத்திருந்த முயற்சிகளைச் செயல்படுத்தி வெற்றி காண்பீர்கள்.

மே மாதம் முதல் ஜுலை மாதம் வரை, லாபஸ்தானத்தில் அமர்ந்துள்ள சனி பகவானை குரு பகவான் பூர்வ புண்ய பஞ்சம திரிகோண ராசியிலிருந்து நேரடியாகப் பார்வை செய்கிறார். 'பருத்தி புடவையாய்க் காய்த்தது' என்பார்களே... அதுபோல் அனுகூலம் ஏற்பட்டு, உங்களுக்கு வருமானம் இரட்டிப்பாகும். 'ஸ்ரீமான்' என்கிற அந்தஸ்துடன் வாழ்க்கைச் சக்கரம் சுழலும். உங்களை எதிர்த்தவர்கள் நடுங்கி ஓடுவார்கள்.

அதேசமயம் பிடிவாதங்களைத் தளர்த்திக்கொண்டு வாழ்க்கையில் முன்னேறுவதற்கு அடித்தளம் அமைக்கவும். 'நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால், என்று பிடிவாதமாக எண்ணாமல், உங்கள் நலம் நாடும் மூத்தோரின் அறிவுரைப்படி வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள். மற்றபடி ஆகஸ்டு மாதம் குடும்ப நிலை விருத்தியாகும். நெடுந்தூரத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரும். உங்களைப் பற்றிக் குறை கூறுபவர்களைக் கண்டுகொள்ள வேண்டாம். அதே நேரம் நண்பர்களைப் போல் பழகும் துரோகிகளை இனம் கண்டு விலக்கி விடுங்கள்.

செப்டெம்பர் மாதத்திலிருந்து ஆண்டு இறுதி வரையில் வாழ்க்கையில் புதிய மலர்ச்சிகளைக் காண்பீர்கள். கானல் நீர் என்று நினைத்த விஷயங்கள் கூட கைகூடும். பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல் இரட்டிப்பு மகிழ்ச்சிக்கு ஆளாவீர்கள். உயர் பதவிகள் தேடி வரும். உங்களின் குடும்பப் பொறுப்பு கூடும். அதேநேரம் சர்ச்சைக்குரிய பிரச்சினைகளில் வாயைக் கொடுத்து மாட்டிக் கொள்ள நேரிடலாம். அதனால் யோசித்துப் பேசவும். எதையும் விளையாட்டாக எடுத்துக் கொள்ள வேண்டாம். எவருக்கும் பிணை போடுவதோ, உங்கள் பெயரில் பணம் பெற்றுத் தருவதோ கூடாது.

உத்தியோகஸ்தர்கள், மேலதிகாரிகளின் நன்மதிப்பைப் பெறுவீர்கள். இருப்பினும் சக ஊழியர்களில் சிலர் பகைமை பாராட்டுவார்கள். அதனால் அவர்களிடம் எச்சரிக்கையாகப் பழகவும். அலைபாயும் மனதைக் கட்டுப்படுத்தி செயலாற்றினால் தோல்வியில் இருந்து தப்பிக்கலாம். மற்றபடி உங்கள் செயலைச் செவ்வனே செய்து முடித்து விடுவீர்கள். மேலும் பயணங்களால் எதிர்பார்த்த லாபங்களைப் பெறுவீர்கள்.

வியாபாரிகள், வாடிக்கையாளரிடம் நிதானமாகப் பேசவும். முன்கோபத்தைக் குறைத்துக் கொள்ளவும். அதோடு கடும் போட்டிகளையும் நீங்கள் சந்திக்க நேரிடும். எனவே புதிய முதலீடுகளைச் செய்ய வேண்டாம். கொடுக்கல், வாங்கல் விஷயங்கள் சரளமாக முடியும். கூட்டாளிகளும் உங்களுக்குச் சாதகமாக நடந்து கொள்வார்கள்.

இந்த ராசி விவசாயிகளுக்கு வருமானம் குறையும். செலவு அதிகரிக்கும். ஆனாலும் தைரியத்தைக் கைவிட மாட்டீர்கள். விளை பொருட்களை உடனுக்குடன் சந்தைக்கு எடுத்துச் சென்று, விற்பனை செய்வீர்கள். கால் நடைகளை நன்கு பராமரிப்பீர்கள். குறித்த நேரத்தில் பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தெளித்து பயிர்களைக் காப்பாற்றுவீர்கள். விவசாயக் கூலிகளை அரவணைத்துச் சென்று உங்களின் கௌரவத்தைத் தக்க வைத்துக் கொள்வீர்கள்.

அரசியல் வாதிகளைப் பொறுத்தவரை கூடுதல் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வீர்கள். புதிய உத்வேகத்துடன் உங்கள் வேலைகளைச் செய்வீர்கள். வழக்குகளில் எதிர்பாராத வெற்றி ஏற்படும். தொண்டர்களால் எதிர்பாராத சிக்கல்கள் தோன்றினாலும், அவற்றை சாதுர்யத்துடன் சமாளிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.

கலைத்துறையைச் சேர்ந்தவர்கள் அதிக முயற்சிக்குப் பின்பே விருதுகளையும், பாராட்டுக்களையும் பெற நேரிடும். பெண் மணிகளுக்கு கணவருடனான ஒற்றுமை சுமாராகவே இருக்கும். ஆனாலும் கணவர் வழி

**ஜோதிடர் கே.சி.எஸ். ஐயர்**

உறவினர்களுடனான ஒற்றுமை நல்ல முறையிலேயே தொடரும். சிலருக்கு வயிறு சம்பந்தப்பட்ட உபாதைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால், உணவு விஷயங்களில் எச்சரிக்கையுடன் இருக்கவும். தெய்வ வழிபாட்டைக் கூட்டிக் கொண்டு ஆன்ம பலம் பெறவும்.

மாணவமணிகள் தினமும் நன்றாகப் படித்து, எதிர்பார்த்த மதிப்பெண்களை அள்ளுவீர்கள். விளையாட்டிலும் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். பெற்றோரிடமும், ஆசிரியர்களிடமும் அனுசரித்து நடந்து கொண்டு நற்பெயர் வாங்குவீர்கள் மனதை ஒருநிலைப் படுத்தினால் மேலும் புகழடையலாம்.

பரிகாரம் :

சிவபெருமானையும், சூரிய பகவானையும் வழிபட்டு வாருங்கள். நேரம் கிடைக்கும் போதெல்லாம் 'நமசிவாய' என்று ஜபித்து வரவும். (வளரும்)

# சிவத்தமிழ் அன்னைக்கு நினைவாலயம்



உலகம் போற்றும் ஆன்மீக அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி நினைவாக துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஏற்பாட்டில் ஆலய மேற்கு வீதியில் நினைவாலயம் உருவாக்கப்பட்டுள்ளது. தன் வாழ்வை சைவ சமயத்திற்கும் ஆதரவற்ற மக்களுக்கும் அர்ப்பணித்த தெய்வீகத்தாயின் அஸ்தியை ஒன்பது செம்புகளில் நவகோண அமைப்பில் பிரதிஷ்டை செய்யப்பட்டு இவ் நினைவாலயம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்து மதப் பெரியார்களின் சமாதிகள் பல்வேறு தத்துவ அடிப்படையில் அமைக்கப்படுவது வழக்கம். அவ்வகையின் சக்தி உபாசகராக விளங்கிய அன்னையின் நினைவாலயம் நவகோணத்தில் அமைதல் பொருத்தமென இந்தியாவிலுள்ள ஆன்மீக அறிஞர்களின் கருத்துக்கு ஏற்ப பிரமாண்டமான முறையில் நவகோணத்தின் நினைவாலயம் அமைக்கப்பட்டுள்ளது.


அஸ்திபீடத்தின் மேல் அணையா விளக்கு பொருத்தப்பட்டுள்ளது. எவ்வித உருவ அமைப்புமின்றி குத்துவிளக்கே தீப ஒளியாக இவ் நினைவாலயத்தில் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. தியான வழிபாட்டுக்கு பொருத்தமான வகையில் தியான வழிபாட்டுக்குரிய நினைவாலயமாக அன்னையின் ஆலயம் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

அன்னையின் திருவுருவச்சிலை ஆலய தென்திசையில் சிவத்தமிழ் அன்னையால் அமைக்கப் பெற்ற திருமுறை மடத்துக்கு அருகில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. புகழ் பூத்த கலைஞர் சிற்பி ரமணியின் கைவண்ணத்தில் சிலை உருவாக்கப் பெற்றுள்ளது. அன்னையின் 84 ஆவது பிறந்தநாள் அற நிதிய விழா ஜனவரி மாதம் ஏழாம் திகதி இடம் பெறவுள்ளது. அத்திருநாளில் சிவத் தமிழ்ச் செல்வி நினைவாலயம் திறக்கப்படுவது சிறப்புக் குரியது.

அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீனத்தில் சுப்பிரமணிய முனி சுவாமிகளின் சீடர்களில் ஒருவராக விளங்கிய ஆன்மீக அன்பர் ரிஷி தொண்டு நாத சுவாமிகள் நினைவாலயத்தை திறந்து வைக்கவுள்ளார். கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட சுவாமிகள் யோக சுவாமிகளின் அடியவராகிய அமெரிக்காவைச் சேர்ந்த சுப்பிரமணிய முனி சுவாமிகளின் திருவருட் பார்வையில் அகப்பட்டு அவரைப் பின் தொடர்ந்து, பத்தொன்பது ஆண்டுகள் ஹவாய் ஆதீனத்தில் ஆன்மீகப் பணியாற்றி வருகிறார்.

அன்னைமீது மிகுந்த அபிமானம் கொண்ட தொண்டு நாத சுவாமிகள் 2006 ஆம் ஆண்டுக்கான சிறந்த ஆன்மீகப் பெரியார் என்ற சர்வதேச விருதினை அம்மாவுக்கு வழங்குவதற்கு காரணமாக விளங்கியவர். அன்னையின் அஸ்தியை காசிக்குக் கொண்டு சென்று கங்கையில் கரைத்து வழிபாடு செய்து விட்டு நினைவாலயத் திறப்பு விழாவுக்கு இவ்விடம் வந்துள்ளார்.

அன்னையின் திருவுருவச் சிலையை திறந்து வைப்பதற்கு அகில இலங்கை இந்து மாமன்றப் பொதுச் செயலர் கந்தையா நீலகண்டன் அழைக்கப்பட்டுள்ளார். கொழும்பில் ஆதரவற்ற சைவச் சிறுவர் இல்லத்தைத் தோற்றுவித்தவர்களில் இவர் முதன்மையானவர். பல்வேறு நெருக்கடியான காலகட்டத்தில் துர்க்காபுரம் மகளிர் இல்லத்திற்கு இந்து மாமன்றம் பேருதவி வழங்க இவர் முழுமுதற் காரணமாக விளங்கியவர். அன்னையின் நினைவாலயம் அருகே துர்க்காபுரம் மகளிர் மகிழ்வதற்காக உருவாக் கப்பட்டுள்ள விளையாட்டுப் பூங்காவை திறந்து வைப்பதற்காக அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவனாகவும் திருக்கேதீஸ்வர திருப்பணிகளில் பெரும் பங்கு கொண்டு உழைப்பவரும் மனிதநேய அமைப்பின் தலைவருமாகிய வி.கைலாசபிள்ளை வருகை தரவுள்ளதும் சிறப்புக்குரியது.



நவ கோண நினைவாலயம்

சிவத் தமிழ்ச் செல்வியின் பிறந்தநாள் அற நிதியச் சபை வழமை போல் அன்னையின் பெயரால் யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட உச்ச வலுவையும் -திறமையுமுடைய மாணவரைத் தேர்ந்தெடுத்து ரூபா இரண்டு இலட்சம் நிதியினை வழங்க ஏற்பாடு செய்துள்ளது.



செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன்

மேலும், அன்னையின் இறுதிக் கால வேளையில் அவரைப் பராமரித்த யாழ். போதனா வைத்தியசாலை தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு என ரூபா ஒரு லட்சம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிவத் தமிழ்ச் செல்வி நினைவாக ஈழத்து பெண்களின் ஆன்மீக, கல்வி, அறப்பணி தொடர்பான ஆராய்ச்சி மலர் வெளியிடுவதற்கான பணி தற்போது நடை பெற்று வருகிறது. இவ் ஆய்வுமலர் அம்மையாரின் குரு பூசை அன்று வெளிவரவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

+++

# மாகாண சபைத் தேர்தல்களில் அரசாங்கத்தின் வெற்றி நிச்சயம்

## கட்சியின் பொதுச்செயலர் மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களில் இலகுவான வெற்றி ஈட்டப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சிகள் எவ்வளவு மோசமாக விமர்சித்தாலும், அரசாங்கத்தின் மீதான மக்கள் ஆதரவு உயர்வடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் நடைபெற்ற தேர்தல்களின் போது அடைந்த வெற்றிகளை விட மகத்தான வெற்றி இம்முறை மாகாண சபைத் தேர்தல்களில் ஈட்டப்படும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

வரலாற்றில் எந்தவொரு காலத்திலும் அமைக்கப்படாத விரிவான கூட்டணியொன்று இம்முறை மத்திய மற்றும் வட மத்திய மாகாண சபைத் தேர்தல்களுக்காக அரசாங்கம் அமைத்துள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டைப் பாதுகாக்கும் போராட்டத்தை காப்போம் என்ற தொனிப் பொருளில் இம் முறை தேர்தல் பிரசார நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதென அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# கம்பகா நகரில் தேடுதல் 28 தமிழர் கைது

(கொழும்பு)

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இலங்கைப் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது கம்பகா நகரில் 28 தமிழ் பொதுமக்கள் கைது செய்யப்பட்டு காவல் நிலையத்திற்கு கொண்டு சென்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இத்தேடுதல் நடவடிக்கையின் போது 13 ஆயிரம் பேர் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டதாகவும் ஆயிரத்து 300 வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் காவல் துறையினர் தெரிவித்ததாக அறியப்படுகிறது. (ஓ-6)


அறிவித்தல்

நெல்லியடி கிளை

ஜனவரி 3ஆம் திகதியிலிருந்து
சனிக்கிழமைகளிலும் உங்கள்
நலன்கருதி திறந்திருக்கும்

மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப.1.00 மணி வரை
உங்களுடைய வங்கி
நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்

தற்போது யாழ் குடாநாட்டில்
யாழ்ப்பாணக் கிளையுடன்
நெல்லியடி கிளையும் சனிக்கிழமை
வங்கிச் சேவையில் இணைந்துள்ளது.

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்

CBCMarketing


# 2009 ஆம் ஆண்டு புத்தாண்டு (க)விதைகள்

## 'ஒன்பதே' நீ வந்துவிடு

2009

இரண்டாயிரத்தி ஒன்பதே...
நீ வா!
இரத்தம் தோய்ந்த
இந்த தேசத்தின்
இரத்த வடுக்களை
"நிஷா" எனும்
புயல் நீர் கழுவிச் சென்றுள்ளது
இப்போது புதியதாய்
புதியதோர் ஆண்டே நீ வா!
ஒன்பதாம் ஆண்டே உந்தனில்
ஒபாமாவின் மாளிகை பிரவேசம்
ஆனால் எங்கள்
ஓலைக் குடிசைகளுக்கு
என்ன பதில் வைத்திருக்கிறாய்!
என் கேள்விகளுக்கு
எப்போதும் பதிலில்லை
என்றபோதும்
என் ஒன்பதே
நீயும் வா!
இது மாளிகைக்கான
தேடல் அல்ல
எங்கள் மண்குடிசையும்
மகத்துவமானதுதான்!
என் ஒன்பதே.
ஒருமுறை வந்து பார்
எந்தச் சமுத்திரங்களுடனும்
நாங்கள் ஒப்பந்தம்
செய்துகொள்வோம்
ஆனால் எங்கள்
தனித்துவங்களை
அதில் கரைத்து விடமாட்டோம்
என்பதை புரிந்து கொள்வாய்
என் ஒன்பதே நீ வந்துவிடு
காத்திருக்கிறேன்.

ப.த.தர்பாகரன், மானிப்பாய்

## மலர்ந்திடும் புத்தாண்டே மகிழ்வினைத்தருவாய்

பன்னிரு திங்களும் பகலுடன் இரவுமாய்
பொழுதுகள் புலர்ந்து பதியினில் கழிந்தன
நன்மைகள் பகர்ந்திட தைத்திங்கள் ஓராம்நாள்
நன்னாளாய் இன்றே பிறக்குது பாரினில்
பன்முக சிறப்பொடு பிறந்திடும் புத்தாண்டே
பொலிவொடு மலர்ந்து மகிழ்வினைத் தருவாய்
இந்நாளே எமக்கொரு சிறப்புறு ஆண்டாக
இரண்டாயிரத் தொன்பதே இருள்நீக்கி ஒளியினைதா

அல்வையூர்,கே.ஆர்.திருத்துவராஜா

## அகரம் போல அகிலம் தழைக்க அருள்வாய் பிறக்கும் புத்தாண்டே

அல்லெல்லாம் அகன்றோட
ஆற்றல் மிகவும் பெருகிடவே
இன்ப ஒளியாய்ப் புத்தாண்டே
ஈசன் அருளுடன் வந்திடுவாய்
உண்மை உணர்வாய் என்றுமே
ஊக்க சக்தியாய் உலகத்தில்
எங்கும் சாந்தி சமாதானம்
ஏற்றம் பெற நீ வரவேண்டும்
ஐக்கியமான வாழ்வதனால் இங்கே
ஒன்றே தெய்வம் என உணர்ந்து மறை
ஓதி நலமுடன் நாம் வாழ நீ
ஔடதமாகவே மிளிர வேண்டும்
அஃதே எங்கள் பிரார்த்தனையாம்
அருள்வாய் பிறக்கும் புது ஆண்டே!!!

தி.மயூரகிரி, நீர்வேலி

## வசந்தமாய் மலர்க...

மைந்தனவன் உதித்திடவே
மையம் கொண்டு மலர்க ...
இன்னல்களைக் களைந்திடவே
இனிமையாக மலர்க ...
சோதனைகளைச் சாதனையாக்க
சோலையுடன் மலர்க ...
தோல்விகளைத் துவம்சம் செய்ய
தோழமையுடன் மலர்க ...
உன்னத உயிர்களை வாழவைக்க
உவகையுடன் மலர்க ...
கொடூரங்களைக் கொன்றொழிக்க
கொளுந்துவிட்டு மலர்க ...
இரத்தம் சிந்தாத அவனியைக்காண
இன்முகத்துடன் மலர்க ...
அநீதிகளைக் கொன்றொழிக்க
அமைதியுடன் மலர்க ...
சரித்திரம் படைக்க வைக்க
சமாதானத்துடன் மலர்க ...
வசந்தகாலத்தை மலரவைக்க
வசந்தமாய் இனியபுத்தாண்டே

சி.ராதிகா ,பொலிகையூர்

## சமாதானம் நிலை பெறவே!

புதுவாழ்வு தொடங்கும் புனித நாளில்
புன்னகைக்கும் உதடுகள் புழுதியில் புரண்டிடவே
அவலங்கள் மேல் அவலங்கள்
ஆறமுன்னே பேரவலங்கள் தொடர்ந்தனவோ

நிம்மதியாய் படுத்துறங்க முடியாத பூமியிது
தளர்ந்து போகுமோ எம்மவரின் தலைவிதியும்
மார்கழி இருபத்தாறு மண்கதற பேரலைகள் அள்ளிடவே
கார்த்திகை இருபத்தாறு வேரோடு பூமியை நெகிழ்த்தியதோ

இதயம் கனக்கும் சுமையோடு நாம் வாழ்ந்திடவே
இன்னுமொரு புத்தாண்டு பிறக்கிறதே
பாரினில் சமாதானம் நிலைபெறவே
பார்போற்றிடும் புத்தாண்டே நீ பிறப்பாய்

அல்வையூர்,யோகி

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

3-III



மரக்கறிப் பயிர்களும் அழுகிவிட்டன. அழிவுக்குள்ளிருந்து தப்பிய பயிர்கள் மிகச் சிலவே.

மா, புளி, விலாட்டு போன்ற மரங்கள் பெரிதாக பாதிக்கப்படவில்லையாயினும் வெள்ளம் நின்ற காரணிகளில் இம் மரங்களும் அடியோடு வேரறுக்கப்பட்டிருக் கின்றன.

அநேகமான இடங்களில் எம் வரலாற்றை பறைசாற்றிய ஆலமரங்கள் சரிந்திருப்பது 'நிஷா'வின் வலிமையை வரலாறாக்கியிருக்கிறது. தேக்கமரங்களின் கிளைகள் முறிந்தும்,பல இடங்களில் முழு மரமுமே சரிந்திருக்கின்றன. வேப்பமரங்கள் 'நிஷா'வின் வெறித்தனத்திற்கு தாக்குப் பிடிக்க முடியாது சரிந்திருக்கின்றன.

'அரச' மரங்களும் ஆங்காங்கே சரிந்திருப்பது வியப்பாக உள்ளது. நீண்ட ஆழமான ஆணி வேருடைய ஆலும் அரசும் அசைக்கப்பட்டு சரிக்கப்பட்டிருப்பதிலிருந்து அடித்த சூறாவளியின் தாக்கத்தை உணர முடிகிறது.

ஆலும் வேலும் பல்லுக்குறுதி என்றாலும் தம் உறுதியை இம்முறை கலக்கிய சூறாவளியில் இழந்துவிட்டன.

**எம் இனிய உறவுகளே !**

இழப்பு எப்போதும் எமக்கு புதிதல்லவே! இயற்கையும் எம்மை சோதித்துப் பார்த்திருக்கிறது. மரங்களை மட்டுமே அசைக்க முடிந்த அந்த இயற்கையை வசப்படுத்தும் காலம் வரும். பசுமையில் புதுமை செய்யும் காலம் கனிந்து வரும். கவலை மறந்து புதிய யுகத்திற்குள் காலடி எடுத்து வைக்க வேண்டும்.

இழந்த மரங்களுக்குப் பதிலாக மரங்களை நடவு செய்ய வேண்டும். வீடுகளுக்கு, தொலைத்தொடர்பு, மின்கம்பங்களுக்கும் பாதைகளுக்கும் இடையூறு செய்யாதவாறு திட்டமிட்டு மரங்களை நடவு செய்தல் நன்று. மழை காலங்களில் அகன்று விரிந்த மரக் கொப்புகளை அளவாக வெட்டி குறைத்திருந்தால் இந்தளவிற்கு மரங்களனைத்தும் சரிந்திருக்காது. இடையூறு தரக்கூடிய மரங்களின் கிளைகளை குறைத்து பாதிப்பேற்படுத்தாத வகையில், அழகும் கெடாத வகையில் மரங்களைப் பாதுகாத்திருக்கலாம். தவறை இனி யாவது திருத்திக் கொள்வோம்.

**கியூபா - தன்னம்பிக்கையின் முத்திரை**

தன்னம்பிக்கையின் அத்திவாரம் கியூபா நாடுதான். அமெரிக்க ஏகாதிபத்திய உருட்டு மிரட்டல்களுக்கு என்றுமே அடிபணியாது தனது மக்களை தனித்துவமான வழியிலே வாழ வழிசெய்தவர். அதன் தலைவர் பிடல் காஸ்ரோ அவர்கள்.




தன்னம்பிக்கையும், விடா முயற்சியும் அத்திவாரமானதால் அங்கே எழுப்பப்பட்ட அனைத்து கட்டடங்களும் எந்த வித அச்சுறுத்தல்களுக்கும் வளைந்து கொடுக்கவில்லை. நிமிர்ந்துதான் நின்றன.

பேச்சிலே, சொல்வன்மையிலே, எண்ணத்திலே உலகமனைத்தையும் கவர்ந்திழுத்த விபுலானந்தரின் கொள்கைகளை செயலில் காட்டிய பிதாமகன் பிடல்காஸ்ரோ என்னும் மாமனிதன். கியூபா நாடு ஆதிக்க வல்லரசுகளின் கைகளிலே சிக்கியிருந்தால் இன்று காணாமல் போயிருக்கும்.

ஆனால், எதிர்த்து,கிளம்பியெழுந்து, வலி பொறுத்து வலிமையை ஒன்றுசேர்ந்து காட்டிய போது உலகமே வியந்தது. இந்த நடைமுறை உதாரணம் எமக்கொரு பாடம். ஒற்றுமையாக எம் கைகள் இணையும்போது அந்த வலிமைக்கு அளவு ஏது?

கியூபா மக்கள் தமக்கான விதைகளை சிறந்த முறையில் உருவாக்கிக் கொள்ள பழகிக் கொண்டார்கள். அந்நிய ஆதிக் கத்தை அடியோடு வெறுத்தால் அங்கிருந்து கிடைத்த பசளைகள், பீடைநாசினிகள் போன்றவற்றையும் பயன்படுத்தாது தடுத்து நிறுத்தினார்கள். தாமாக நிறுத்தினார்கள் என்பதை விட ஆதிக்க வல்லரசுகள் பொருளாதாரத் தடையென அறிவித்துக் கொடுப்பதை நிறுத்தினார்கள். விவசாயம் செய்ய முடியாததொன்றாகி விட்டது.

ஏனெனில், அனைத்து விவசாயிகளும் விவசாய உள்ளீடுகளான பசளைகள், பீடைநாசினிகள் போன்றவற்றை அதிகமாக பயன்படுத்தியதும், முழுமையாக அதிலே நம்பியிருந்தது மே இதற்குக் காரணம்.. நாமும் அப்படித்தானே!

பொருளாதாரத் தடை வலிந்து களமிறக்கப்பட்டது.ஆனால் மக்கள் வளைந்து கொடுக்கவில்லை. தலைவரின் சொல்லுக்கு கட்டுப்பட்டார்கள். சேதன விவசாயத்தை முழுமையாக கையிலெடுத்தார்கள். தமது நாட்டில் இருக்கின்றீ வளங்களனைத்தையும் சரியாக இனங்கண்டு கொண்டார்கள்.

அந்த வளங்களை சிறப்பாக பயன்படுத்துவதில் ஆராய்ச் சித் துறையை முடுக்கி விட்டார்கள். கழிவு களை சேதனப் பசளைக்ளாக மாற்றினார் கள். நச்சுத் தன்மை கொண்ட அசேதன இரசாயன பீடைகொல்லிகளை தாமாகவே அறவே ஒதுக்கினார்கள்.

ஆதிக்க வல்லரசிற்கு கொடுத்த முதல் அடி இது. சேதன விவசாயமே முழு மூச்சானது. விவசாயத் துறையினர் ஒன்றிணைந்து சேதன விவசாயத்தை கட்டியெழுப்ப விவசாயிகளுடனும் கூட்டுச் சேர்ந்து பல ஆண்டுகளாக பாடுபட்டார்கள்.

இன்று சேதன விவசாயத்திற்கு முன் மாதிரியான நாடாக, அடக்கியொடுக்கப்பட்டு பட்டினி போடப்பட்ட மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை தாமாகவே கட்டியெழுப்பியவர்களாக ஒற்றுமையின் சின்னமாக ஒரு குடையின் கீழே திரண்டெழும்பியிருக்கிறார்கள்.

வளர்ந்து வரும் நாடுகளுக்கு இது என்றுமே ஒரு படிப்பினை கியூபா நாட்டு மக்களால் தமக்கு தேவையான பயிர் விதைகள் மட்டுமல்ல முழு விவசாயத்தை யுமே திட்டமிட்டு செயலாற்ற முடிந்திருக்கின்றது! இலகவழி விவசாயமென்று தேடிப் புகுத்திய அசேதனப் பசளைகளும் பீடைநாசினிகளும் அறவே தேவையில்லையென்று ஒதுக்க துணிந்த கியூபா நாட்டு மக்கள் எங்களெல்லோருக்கும் நல்லதொரு உதாரணம்.

எமக்குத் தேவையான உணவை நாமே உற்பத்தி செய்தல் சிறப்பானதன்றோ. சிறுகச் செய்தால் வீட்டுத் தோட்டம். பெருகச் செய்தால் தேசியத்தின் அபிவிருத்தி.

தென்னிலங்கையிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் தருவிக்கப்படும் உருளைக் கிழங்கு நமக்கு அவசியம் தானா? எமக்கென்று இருக்கின்ற பயிருணவுப் பொருட்களில், அவற்றை உண்பதில் அக்கறை காட்டினால் சுகமாகவும் வாழலாம்,சுதந்திரமாகவும் சீவிக்கலாம்.

உருளைக்கிழங்கிற்கு நாம் அடிமையாதல் தேவையா? அதில் வெறும் மாச்சத்து இருப்பது மட்டுமல்லாது எவ்வளவிற்கு பீடைநாசினிகள் செறிவாக இருக்கிறதென்ற உண்மை தெரியாத பலர் நம்முள்ளேயும் இருக்கின்றார்கள்.

**கலாநிதி கு.மிகுந்தன்**
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

சென்ற பசுமைப்புரட்சி தந்த சுகம் [illegible] மல்ல. ஆனால், தனிமனித சுகாதார[illegible], சுற்றுச்சூழலை அதிகம் பாதித்துவிட்டதே அதிகம்.

அதுபற்றி இனிவரும் காலங்களில் அலசுவது பொருத்தப்பாடானதே. (வளரும்)

# வெங்காய செய்கையில் ஏற்படும் இலைச்சுருட்டல் குமிழ் அழுகல் நோய்

யாழ். மாவட்டத்தில் தற்பொழுது வெங்காயப் பயிர்ச் செய்கையில் இலைச் சுருட்டலும், குமிழ் அழுகல் நோயும் அவதானிக்கப்பட்டுள்ளது. 2004/2005 பெரும்போகத்தில் இந் நோயானது அதிகளவு சேதத்தை ஏற்படுத்தியது.

பொதுவாக ஒரு தோட்டத்தில் 5% வரை இலைச் சுருட்டல் நோயும் 10% வரை குமிழ் அழுகல் நோயும் அவதானிக்கக் கூடியதாக இருக்கும். தற்பொழுது இங்கு காணப்படும் கூடிய ஈரலிப்பு இந்நோய் ஏற்படுவதற்கு பிரதான காரணியாகவுள்ளது.

இந் நோயானது நடுகை பண்ணப்படும் விதை வெங்காயம் மூலமாகவோ அல்லது வயலில் உள்ள நுண்ணங்கிகள் மூலமாகவோ ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே நாம் விளைத்திறனான ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளை பாவிப்பதால் மட்டுமே இவற்றைக் கட்டுப்படுத்தலாம்.


இலைச் சுருட்டல் நோய், பங்கசினாலும், விலாங்குப் புழுவினாலும் ஏற்படுகின்றது. விலாங்குப் புழுவின் தாக்கத்தினால் அழுகல் நோய் ஏற்படுத்தும் பங்கஸ் இலகுவாக வெங்காயத்தினுள் புக முடிகின்றது. எனவே பங்கசுவையும் விலாங்குப் புழுவையும் கட்டுப்படுத்தல் அவசியமாகின்றது.

விலாங்குப் புழுவினால் ஏற்படும் இலைச் சுருட்டலில் இலைச் சுருளல் கூடுதலாகவும், பங்கசுவினால் ஏற்படும் இலைச் சுருட்டலில் இலை மஞ்சள் நிறமாகி ஊதா நிறமான புள்ளிகள் – இலைகளில் காணப்படும்.

**நோய்களுக்கான அறிகுறிகள்**

இலை சுருட்டல் :-

இலை சுருட்டல் நோயானது குமிழ் நாட்டி பெரும்பாலும் ஒரு மாதத்தின் பின்னர் அறிகுறிகள் காணக்கூடியதாக இருக்கும். ஆரம்பத்தில் புதிதாகத் தோன்றும் தாழ்கள் நலிவடைந்து மெலிந்து தட்டையான தோற்றத்துடன் வளைந்து காணப்படும். இவ் இலைகள் ஒரு தோற் தன்மையுடையதாகவும் காணப்படும்.



இதன் பின்னால் வரும் சகல தாழ்களும் இப்படியான தோற்றத்துடனே வெளிவரும். இலைகள் முதிர்வடைய முன்னரே வெளிறி மஞ்சள் நிறமாக மாறி மடியப் பார்க்கும். குமிழ்கள் திரளாமல் நலிவடைந்து கோழிக் கால் வெங்காயம் போல் தோற்றமளிக்கும்.

வெகு விரைவில் வெங்காயம் முதிர முன் தாவரம் இறக்கும். நாட் சென்ற அல்லது 45 - 50 நாட்களின் பின் இந்நோய் தோன்றினால் வெங்காயம் திரண்டிருக்கும். மற்றைய நோய் அறிகுறிகளுடன் குமிழ் அழுகல் நோயும் ஏற்பட வாய்ப்புண்டு. இதனால் வெங்காய அறுவடையை குறிப்பிட்ட நாட்களின் முன் அறுவடை செய்ய வேண்டியேற்படும்.

**நோய்க்காரணி**

இந்நோயானாது கொலற்ரோறிகம் (Colletotrichumsp) என்னும் ஒரு பங்கசினாலும் விலாங்குப் புழுவின் தாக்கத்தினாலும் ஏற்படுகின்றது. இரண்டினது நோய் அறிகுறிகளும் ஒரே மாதிரி தோன்றினாலும் நுணுக்குக்காட்டி மூலம் நோய்க் காரணிகளைப் பகுத்தறியலாம்.

இவை வெங்காயம் செய்கை பண்ணப்படும் எல்லாப் பாகங்களிலும் காணக் கூடியதாகவுள்ளது. பொதுவாக ஈரலிப்பு கூடிய அதிக நைதரசன் பாவனை உள்ள தோட்டங்களிலும் இப் பங்கசுவின் தாக்கம் அதிகமாக இருக்கும்.

**நோய் கட்டுப்பாட்டு முறைகள்**

நோய் அற்ற நடுகை விதை வெங்காயம்.

விதை வெங்காயத்தில் அழுகல் அற்ற நல்ல குமிழ்களை நாட்டவும். விதை வெங்காயம் அழுகல் அற்ற தோட்டத்தில் இருந்து பெறப்பட வேண்டும்.

தோட்டத்தை தினசரி அவதானித்து வெங்காயத் தாள்கள் மஞ்சளாவதை அவதானித்தால் சிபாரிசு செய்யப்பட்ட பங்கசு நாசினியை விசிற வேண்டும்.

நோயுள்ள பாத்தியில் இருந்து நோய் அற்ற பாத்திக்கு நீர் பாய்ச்சுவதை தவிர்க்க வேண்டும்.

**நோய் உள்ள குமிழ்களை பிடுங்கி அழிக்கவும்**

*இராசயன முறை*

***1.விதைப் பரிகாரணம் :-***

70 கி. கோமாய் (Homai - Thiophonate Methy / 50% WP + Thiram 30% WP) 50 லீற்றர் நீரில் கரைத்து 30 நிமிடங்கள் ஊற விட்டு நிழலில் உலர்த்தி நட வேண்டும்.

2.70கி. கோமாய் 50 லீற்றர் நீரில் கரைத்து 10 சதுர மீற்றர் பரப்பிற்கு மண்ணில் பயிருக்கு நன்றாகப் படும் படி ஊற்ற வேண்டும்.

**செல்வி பா.பாலசிங்கம்**
விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்
விவசாய ஆராய்ச்சி நிலையம்,
திருநெல்வேலி.

3.பயிருக்கு ரெப்சின் (Thiophonate Methy / 70% WP) 5.5 கி / 10 லீற்றர் நீரில் கரைத்து பயிருக்கு நன்றாக படும்படி விசிற வேண்டும். தாக்கம் கூடுதலாக இருந்தால் 10 நாட்களுக்குப் பின்பு திரும்பவும் விசிற வேண்டும்.

4.விலாங்குப் புழுவினால் பாதிக்கப்பட்ட பயிராயின் 20கி.கி. பியுராடான் ஒரு ஹெக்ரேயருக்கு இட வேண்டும்.

தோல்வியுற்ற ஒருவனிடம், உனது வெற்றியைப் பற்றிப் பேசுவது,அவனது பகையை சம்பாதிப்பதாகும்.

~ சீனா

வலம்புரி

# கிளிநொச்சிக்குப் பின் சமாதானம் மலருமா?

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த கிளிநொச்சியை மீட்டு விட்டதாக இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

கிளிநொச்சியை மீட்பதற்காக, படையினர் பல மாதங்களாக யுத்தம் நடத்தினார்கள் என்பதற்கப்பால் விமானக் குண்டுவீச்சு, எறிகணைத் தாக்குதல்கள் என கிளிநொச்சி நகரம் முழுவதும் சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளது.

இத் தாக்குதல்கள் தனித்து கிளிநொச்சி நகரில் மட்டும் நடந்ததல்ல. மாறாக பொதுமக்களின் குடியிருப்புகள் மீதும் நடத்தப்பட்டதனால் குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் எனப் பலரும் உயிரிழந்து போயினர்.

அரசின் யுத்தத்தால் அத்தியாவசியப் பொருட் தட்டுப்பாடு, இடப்பெயர்வு என பல்வகை துயரத்தை வன்னி மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

இந்நிலையில் கிளிநொச்சியை கைப்பற்றி விட்டோம் என்ற அறிவிப்பை அரசு வெளியிட்டுள்ளது.

கிளிநொச்சியை பிடித்துவிட்டோம் என்பது யுத்தத்தின் இறுதிக்கட்டமாக இருப்பின் அது தொடர்பில் வெற்றி விழாக்களும் கொண்டாட்டங்களும் அர்த்தமுடையதாக இருக்கும்.

ஆனால் கிளிநொச்சி என்பது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த ஒரு நகரம் என்பதைத் தவிர அதற்கு வேறு எந்த முக்கியத்துவமும் கொடுக்க முடியாது.

எனினும் இலங்கை அரசு கிளிநொச்சியை மீட்டுவிட்டோம் என முரசம் கொட்டுகிறது.

கிளிநொச்சியைக் கைப்பற்றியதற்காக நடக்கும் வெற்றிவிழாவை விட இன்னுமோர் உயர்வான –பெறுமதியான வெற்றி விழாவை சமாதானத்தை நிலைநாட்டுவதன் மூலம் அரசு கொண்டாடியிருக்கலாம்.

அப்படியானதோர் விழா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு உலகளாவிய ரீதியில் பெயரையும் புகழையும் கொடுத்திருக்கும் என்பதுடன் அவரின் இம்மைக்குப் பின்னரும் அதுபற்றி உலகம் பேசியிருக்கும்.

கிளிநொச்சியை மீட்டுவிட்டோம் என்பதற்கப்பால் அதன் மீட்புக்காக இழந்தவை பற்றி சற்றுச் சிந்திப்போமாக இருந்தால் வேதனையே மிஞ்சும்.

1995ஆம் ஆண்டில் யாழ்.குடாநாட்டை அப்போது ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்கா கைப்பற்றினார். இறுதி முடிபு என்ன?

சார்க் மாநாட்டின்போது அவர் இருப்பதற்கு கதிரை இல்லாமல் அலைந்தார். இது மட்டுமல்ல, இலங்கையை விட்டு நிரந்தரமாக வெளியேறிவிடவேண்டும் என்ற அளவுக்கு அவரின் நிலைமை உள்ளது.

யாழ்.குடாநாட்டைக் கைப்பற்றியபோது சந்திரிகா வாழ்க என்று கோஷம் போட்டவர்கள் இப்போது அவரை நீதிமன்றில் விசாரிக்க வேண்டும் என்கின்றனர். இதுவே இயற்கையின் நியதி.

இன்று கிளிநொச்சிக்கான வெற்றியைக் கொண்டாடலாம். ஆனால் நாளைய நிலைமை என்ன? இந்தத் தத்துவத்தை உணர்ந்து செயற்படும் எவரும் சமாதானத்தையே வேண்டி நிற்பர்.

# மகிந்த அரசுக்கான ஆதரவை விலக்கப் போவதாக மலையக மக்கள் முன்னணி எச்சரிக்கை

மகிந்த ராஜபக்ஷ அரசுக்கான ஆதரவை விலக்கிக் கொள்ளப் போவதாக மலையக மக்கள் முன்னணி எச்சரிக்கை விடுத்துள்ளது.

தலவாக்கொலவில் மகிந்தவின் ஆளும் கூட்டணியில் இடம்பெற்றுள்ள மலையக மக்கள் முன்னணிக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரசுக்கும் இடையே புதன்கிழமை மோதல் நிகழ்ந்தது.

இரு தரப்பினரும் ஒருவரையொருவர் மோதலுக்குக் காரணமாக கூறி வருகின்றனர். இதனைத் தொடர்ந்து அரசாங்கத்திலிருந்து வெளியேற வேண்டும் என்று தமது கட்சியில் நெருக்கடி அதிகரித்து வருவதாக மலையக மக்கள் முன்னணியின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். இருப்பினும் மூத்த அமைச்சர்கள் மலையக மக்கள் முன்னணியை சமாதானப்படுத்தி வருகின்றனர்.

இதனிடையே மலையக மக்கள் முன்னணி மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்சார் இணைந்து தங்களைத் தாக்கியதாக தலவாக்கொல பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஓ-6)

# திரைப்படக் காட்சி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புறநிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் கல்விசார் / கலைத்துவம் சார் படக்காட்சித் தொடர்பில் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.30 மணிக்கு சர்வதேசப் புகழ் பெற்ற பெண் நெறியாளர் 'அபர்ணாசென்னின் Mr. & Mrs. ஐயர்' திரைப்படமும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அவரது "சதி" (கற்புடைய மனைவி) எனும் திரைப்படமும் அரசறிவியல் விரிவுரை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

திரைப்படக்காட்சியின் இறுதியில் திரைப்படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறுமெனவும் ஆர்வலர்கள் அனைவரும் வருகை தந்து பயன் பெற முடியுமெனவும் புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார் (ஓ)

# தாச்சிச் சுற்றுப் போட்டி

சோ.ஆ. நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்தும் வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, தீவகம், ஆகிய பிரிவில் உள்ள கழகங்களுக்கு இடையிலான மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டு சங்கத் தலைவர் செ.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. இப் போட்டியில் மானிப்பாய் வெஸ்ரோம் விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து மயிலிட்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட சோ.ஆ. நிறுவன நிகழ்ச்சி திட்ட முகாமையாளர் ஜே. யூட்வோல்டன், யாழ். இந்துக்கல்லூரி அதிபர் எ.கணேசராசா, யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச்சங்க நிர்வாக உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4)

# வன்னி செல்ல அனுமதி கோருகிறார் ஐ.தே.க. உறுப்பினர் ஜயலத்

வன்னிப்பகுதி நிலைமைகளைப் பார்வையிடச்செல்ல தனக்கு அனுமதிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன கோரிக்கை விடுத்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு அவர் அனுப்பிய கடிதத்தில் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தினருடன் இணைந்து வன்னி நிலைமைகளைப் பார்வையிட தனக்கு அனுமதி அளிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு அரச அதிபர்கள், கத்தோலிக்க ஆயர்கள், மருத்துவ சேவை அதிகாரிகள் ஆகியோரையும் இடம்பெயர்ந்த மக்களையும் தான் சந்திக்க திட்டமிட்டுள்ளதாகவும் ஊடகவியலாளர்கள் மாநாட்டில் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார். (ஓ-6)

# வலிக்கண்டி மீள்குடியேற்றத் திட்டம்

வலிக்கண்டி மீள்குடியேற்றத் திட்டத்தில் (நாகர்கோயில் தெற்கு) 120 குடும்பங்களை மீள் குடியேற்றம் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டு அவர்களுக்கான வீடுகள் கட்டப்பட்டன. இவற்றில் 72 குடும்பங்கள் குடியேறியுள்ளனர் எனவும், மீதி 48 குடும்பங்களும் இற்றைவரை குடியேறவில்லை எனவும் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். இவ்வாறு குடியேறாதவர்கள் உடனடியாக குடியேறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

குடியேறத் தவறுபவர்களின் வீடுகள் சம்பந்தமாக மீள் பரிசீலனை செய்யப்பட்டு காணி அபிவிருத்திச் சட்டத்தின் 106 ஆம் பிரிவின் கீழ் இவர்களுக்கான காணி ஒதுக்கீடு இரத்துச் செய்யப்படும் எனவும் இது விடயமாக மேலதிக விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படமாட்டாது என்றும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ஓ)

# அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதன் மூலம் செலவினத்தை குறைக்க முடியும்

## சுதேச வைத்திய அமைச்சர் திஸ்ஸ கரலியத்த

அரசில் தற்போது அங்கம் வகிக்கும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் மற்றும் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைத்து குறைந்தளவிலான அமைச்சரவை அமைச்சுக்களை நியமித்து பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் அமைச்சரவைக்காக அரசு செலவிடும் அதிகரித்த பணத்தினை குறைத்துக் கொள்ள முடியும் என சுதேச வைத்திய அமைச்சர் திஸ்ஸ கரலியத்த அண்மையில் அநுராதபுரத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரை நிகழ்த்துகையில், சுதேச வைத்திய அமைச்சு, மத விவகார அமைச்சு, மற்றும் கலாசார விவகார அமைச்சு ஆகியன ஜனாதிபதியின் பொறுப்பில் கொண்டு வரப்பட வேண்டும் என யோசனையை நான் முன் வைத்துள்ளேன்.

எனது அந்த யோசனை அமுல் படுத்தப்படுமானால் நான் பதவி வகிக்கும் சுதேச வைத்தியத் துறை அமைச்சை தியாகம் செய்து விட்டு ஜனாதிபதியின் பொறுப்பின் கீழ் பிரதியமைச்சராக செயற்பட நான் தயார்.

மேற்படி மூன்று அமைச்சுக்களையும் கட்டி எழுப்புவதனால் எனது யோசனையை அமுல்படுத்துவதே சிறந்ததாகும்.

எதிர்காலத்தில் எந்தக் கட்சி ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றினாலும் அரசியல் கட்சிகள் கூட்டமைப்புகளாக மாற்றமடைந்தாலும் அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரித்தே செல்லும் என்பதால் இப்போதே அமைச்சர்களின் எண்ணிக்கையை குறைத்து பிரதியமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்ற எனது யோசனை கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும் என்றார். (ஓ-6)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## தைரியமாக இரு



தென் கடல் தீவுகளில் பெரும் புயலில் அடியுண்ட சில கப்பல்களைப் பற்றிய ஒரு கதையை நான் படிக்க நேர்ந்தது. அதைப் பற்றிய படமும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் (Illustrated London News) வந்தது.

ஒரே ஒரு ஆங்கிலேயக் கப்பலைத் தவிர மற்றவை அனைத்தும் உடைந்து போயின. ஆங்கிலேயக் கப்பல் மட்டுமே தாக்குப் பிடிக்க முடிந்தது. தாங்கள் மூழ்கிப் போவதைப் பற்றிச் சிறிதும் எண்ணாமல், கப்பல் தளத்தில் நின்று, புயலை எதிர்த்துச் செல்லும் கப்பல்களை உற்சாகப்படுத்துபவர்கள் அந்தப் படத்தில் காணப்பட்டனர்.

அவர்களைப் போல் தைரியத்துடனும் கருணையுடனும் இருங்கள்.

இருள் உன்னைச் சூழ்கின்ற போதெல்லாம் உன் உண்மை இயல்பை வலியுறுத்து, பாதகமானவை எல்லாம் மறைந்தே தீர வேண்டும். ஏனெனில் இவை எல்லாம் வெறும் கனவுகள்.

துன்பங்கள் மலையளவாகத் தோன்றலாம், எல்லாமே பயங்கரமானவையாக, இருள் சூழ்ந்தவையாகத் தோன்றலாம், ஆனால் எல்லாம் வெறும் மாயை.

பயப்படாதே, மாயை மறைந்து விடும். நசுக்கு, அது ஓடிவிடும். காலால் மிதி, இறந்து விடும்.

பயத்திற்கு இடம் கொடுக்காதே. எத்தனை முறை தோல்வி அடைந்தாய் என்பதை எண்ணிக் கொண்டிருக்காதே அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்.

காலத்திற்கு எல்லையில்லை. முன்னேறு. திரும்பத் திரும்ப உன் உண்மை இயல்பை வலியுறுத்து, ஒளி வந்தே தீரும்.



## இன்று ஈழத்து சிதம்பர சௌந்தராம்பிகை சுந்தரேஸ்வரப் பெருமான் திருவெம்பாவை (3ஆம் நாள்) 2009.01.03 சனிக்கிழமை

### பாமணக்கும் தமிழாலே சிவனை பாடித் தொழுகின்றேன்


(2009)

வில்லடியும் கல்லடியும் சொல்லடியும் விருப்பமுடன்
நல்லடியாய்ப் பெற்றானை நச்சரவம் பூண்டானை
நிலவுத் தலையானை நீள்முடிகள் கலையானை
ஈழத்து சிதம்பரனை எழிலான எம் சிவனை
ஆரூரின் நாயகனை அருள் மணக்கும் தயாபரனை
தேரூரின் தலைமகனைத் திண்ணபுர இறையவனை
பார்வியக்கின்ற சிவனாரை பார்வதியின் நாயகனை
பாமணக்கும் தமிழாலே பாடித் தொழுகின்றேன்

மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்

# வெள்ளை வானில் வந்தவர்களினால் இளம் பெண் கடத்தப்பட்டார்

## வவுனியா பாரதிபுரத்தில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா பாரதிபுரத்தில் உறவினர்கள் வீட்டில் இருந்தபோது அங்கு சென்ற இனம் தெரியாதவர்களினால் இளம்பெண் ஒருவர் கடத்திச்செல்லப்பட்டுள்ளதாக அவரது தாயார் தெரிவித்திருக்கின்றார்.

பட்டப்பகல் வேளையில் நடைபெற்ற இந்த கடத்தல் சம்பவத்தினால் பாரதிபுரம் கிராமம் உட்பட அந்தப் பகுதிகளில் பதட்டம் ஏற்பட்டுள்ளது.

வியாழக்கிழமை பகல் 12.30 மணியளவில் இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது.

கடத்திச் செல்லப்பட்ட பெண் இருந்த வீட்டிற்கு வெள்ளை வான் ஒன்றில் வந்தவர்கள் அவரை கடத்திச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பாரதிபுரத்தைச் சேர்ந்த முத்துச்சாமி ரேணுகாதேவி (வயது 28) என்ற இளம்பெண்ணே இவ்வாறு கடத்திச்செல்லப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பொலிஸ் நிலையத்தில் கடத்தப்பட்டவரின் தாயார் முறையிட்டுள்ளார். (ஓ-6)

# 3 அகதிகள் உட்பட நான்கு பேர் செங்கல்பட்டு முகாமுக்கு மாற்றம்

(இராமேஸ்வரம்)

இலங்கைக்கு அலுமினியக் கட்டி கடத்திய வழக்கில் விடுதலை செய்யப்பட்ட 3அகதிகள் உட்பட நாலு பேரை கியூ பிரிவு பொலிஸார் கடந்த வியாழக்கிழமை செங்கல்பட்டு முகாமில் அடைத்தனர்.

கடந்த 2007 பெப்ரவரியில் தனுஷ்கோடியிலிருந்து நாட்டுப் படகில் இலங்கைக்கு அலுமினியக் கட்டியைக் கடத்த முயன்ற வழக்கில் இலங்கை அகதிகள் ஆண்டான் சுகுமார், ஜெயகரன், ரஞ்சித்குமார் உட்பட 12பேரை கியூ பொலிஸார் கைதுசெய்து சிறையிலடைத்தனர். அகதிகளைத் தவிர மற்றவர்கள் பிணையில் சென்றனர்.

வழக்கின் விசாரணை இராமேஸ்வரம் குற்றவியல் நீதிமன்றத்தில் நடந்தது. குற்றவாளிகள் 3பேரும் இரண்டரை ஆண்டுகள் சிறைத்தண்டனையை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டுமென நீதிபதி விஜய குமார் உத்தரவிட்டார்.

சிறைத்தண்டனையை 3பேரும் அனுபவித்ததால் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.பின்னர் 3பேரையும் செங்கல்பட்டு முகாமில் கியூ பொலிஸார் மாற்றினர்.

இதேபோல் கடந்தமாதம் இலங்கையிலிருந்து அகதிகளோடு வந்த கென்னடி என்பவர் இலங்கையில் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டு வந்ததாக சந்தேகித்த கியூ பிரிவு பொலிஸர் அவரையும் செங்கல்பட்டு முகாமில் அடைத்தனர். (ஓ-6)

## பஸ் மோதி பிழைத்த பாதசாரி வேறொரு பஸ் விபத்தில் பலி

(லண்டன்)

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் பஸ் மோதியும் உயிர் பிழைத்திருந்த பாதசாரி ஒருவர் சிறிதுநேரத்தில் வேறொரு பஸ் மோதியதில் உயிரிழந்துள்ளார்.

வீதியில் சென்று கொண்டிருந்த ஒரு பஸ் இடித்ததன் பின்னர் அவரை ஒரு வாடகைக் காரில் ஏற்றிக்கொண்டு மருத்துவமனை சென்றிருந்தனர்.

ஆனால் அவர் தனக்கு காயம் ஒன்றும் இல்லை என்று கூறி காரில் இருந்து இறங்கி நடந்து வீதியைக் கடக்க முயன்ற போது அவரை இரண்டாவதாக ஒரு பஸ் மோதியதில் சம்பவ இடத்திலேயே அவர் உயிர் பிரிந்தார். (ஓ-6)


## Hatton National Bank

A quoted public company incorporated in Sri Lanka in March 1970, with limited liability

### அடகுப் பொருட்கள் ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 15-11-2007 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 10-01-2009 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இல. 212, 214 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ். கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருட்களை உடனே மீட்க முடியாவிட்டால்....

- கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா. 500) செலுத்தி

அல்லது

- தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருட்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

(C-1942) ஹற்றன் நஷனல் வங்கி



## ஸ்ரீ லங்கா இன்சூரன்சின் மாபெரும் 2009 ஆம் ஆண்டிற்கான வேலை வாய்ப்புத்திட்டம்

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்

50 பில்லியன் ரூபாயைவிட அதிக சொத்துக்களை நிர்வகிக்கும் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் இலங்கையின் மிகப் பழமைவாய்ந்த விசாலமான மற்றும் மிகுந்த வலிமையான காப்புறுதி நிறுவனமாகும். உலகப் புகழ்பெற்ற தரப்படுத்தும் நிறுவனமான பிட்ச் ரேட்டிங்ஸ் லண்டன் நிறுவனத்திடம் இருந்து நிதியியல் வலிமைவாய்ந்த தேசிய காப்புறுதி நிறுவனம் AA-(lka) என்றும் தேசிய நீண்டகால கடனுக்கான A+(lka) என்னும் தரப்படுத்தல்களை வென்ற முதல் காப்புறுதி நிறவனமாகும். அத்துடன் யாழ்மாவட்டத்தில் 40 வருட கால சேவையினை மக்களுக்கு வழங்கி வருகின்றது.

மேற்படி எமது நிறுவனமானது யாழ்.மாவட்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆயுள் காப்புறுதி பிரிவிற்கு பின்வரும் பதவிகளிற்கு துடிப்புமிக்க இளைஞர் யுவதிகளிடமிருந்து பின்வரும் பதவிகளிற்கு விண்ணப்பங்களை கோருகின்றது.

### பதவி -01 வெற்றிடங்கள் 05 ☞ விற்பனை அதிகாரி-ஆயுள் (Sales Executive Life)

மேற்படி பதவிக்கான தகைமைகள்

1.க.பொ.த. உயர்தரத்தில் 03 பாடங்களில் சித்தி
2.காப்புறுதித் துறையில் குறைந்தது. 02 வருடம் பணியாற்றிய அனுபவம்
3.வயதெல்லை 18-30 வரை
4.இலங்கைக் காப்புறுதி நிறுவகத்தினால் நடத்தப்படும் பரீட்சையில் (IBSL Exam) சித்தி பெற்றவர்களுக்கு முன்னுரிமை

மேற்படி பதவிக்கான அனுகூலங்கள்

1.அடிப்படைச் சம்பளம் (Basic Salary)
2.ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதி (EPF, ETF)
3.மோட்டார் வாகன வசதி (Car/Motorbike Facility)
4.தொலைபேசி வசதி (Mobile phone)
5.வருடப்பங்குலாபம் (Bonus)

### பதவி - 02 ☞ குழுத்தலைவர் (Group Leader)

மேற்படி பதவிக்கான தகைமைகள்

01.க.பொ.த. சாதாரண தரத்தில் 06 பாடங்கள் சித்தி
02.வயதெல்லை 18-30 வரை
03.இலங்கைக் காப்புறுதி நிறுவகத்தினால் நடத்தப்படும் பரீட்சையில் (IBSL Exam) சித்தி பெற்றவர்களுக்கு முன்னுரிமை
04.காப்புறுதி துறையில் குறைந்தது 01 வருடம் பணியாற்றிய அனுபவம்

மேற்படி பதவிக்கான அனுகூலங்கள்

1.எல்லையற்ற, நிரந்தர வருமானம்
2.மோட்டார் வாகன வசதி
3.வருடாந்த பங்கு லாபம்
4.மேலதிக படிகள்

### பதவி - 03 ☞ காப்புறுதி ஆலோசகர் (Insurance Advisor)

01. பகுதி நேரம் (Part Time)
02.முழு நேரம் (Full Time)

மேற்படி பதவிக்கான தகைமைகள்

1.க.பொ.த. சாதாரண தரத்தில் 06 பாடங்கள் சித்தி
2.வயதெல்லை 18-55 வரை
3.அரசு மற்றும் தனியார் துறையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள்
4.2008இல் க.பொ.த. உயர்தர பரீட்சையினை நிறைவு செய்தவர்களும் மேற்படி பதவி 3 இற்கு விண்ணப்பிக்கலாம்

மேற்படி பதவிக்கான அனுகூலங்கள்


5.எல்லையற்ற நிரந்தர வருமானம்
6.மோட்டார் வாகன வசதி
7.வருடாந்த பங்கு லாபம்
8.மேலதிக படிகள்

மேற்படி பதவிகளிற்கான விண்ணப்ப முடிவுத் திகதி 15/01/2009 விண்ணப்ப மேலுறையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடவும்

விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய முகவரி:
Sales Manager-Life,
Sri Lanka Insurance,
No.12 1st Floor Weerasingham Hall,
Jaffna.

C-1946

# ஓய்வு பெறுவாரா ஹைடன்!



(சிட்னி)

சிட்னி டெஸ்ட்டைத் தொடர்ந்து கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறும் எண்ணம் எதுவும் இல்லை என அவுஸ்திரேலிய அணியின் ஹைடன் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் செய்துள்ள சிமித் தலைமையிலான தென்னாபிரிக்க அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது.

இவ்விரு அணிகள் மோதிய முதல் இரண்டு டெஸ்டிலும் பொன்டிங் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி தோல்வி அடைந்து 0:2 என தொடரை இழந்தது.

சமீபத்தில் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இழந்த அவுஸ்திரேலியா அந்நாட்டு ஊடகங்களின் கழுகு பார்வைக்கு இரையானது.

இதனையடுத்து இந்தியா மற்றும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் மோசமான ஆட்டத்தை வெளிபடுத்திய ஹைடன் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் ஓய்வு பெற வேண்டுமென அந்நாட்டு ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டன.


இந்நிலையில் இந்த அணிகள் மோதும் மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் சிட்னியில் இன்று ஆரம்பமாகிறது.

ஓய்வு குறித்து மறுப்பு தெரிவித்துள்ள ஹைடன்,மெக்ராத் பவுண்டேசன் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கூறுகையில், தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இழந்ததை முன்னிட்டு கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறும் எண்ணம் சிறிதளவும் இல்லை.

என்னுடைய ஓய்வை சரியான நேரத்தில் அறிவிப்பேன். இதில் கடுகளவும் மாற்றம் இல்லை. தற்போது சிட்னி டெஸ்ட்டில் மட்டுமே கவனம் செலுத்தி வருகிறேன். இதற்காக கடும் பயிற்சியில் ஈடுபட்டுள்ளேன். கடந்த 15ஆண்டுகளாக என்னுடைய பணியை சிறப்பாக செய்து வருகிறேன். இனி வரும்காலங்களிலும் என்னுடைய பணியை நல்ல முறையில் செய்வேன் என்றார்.

# மெண்டிஸ் மீண்டும் அணியில் பங்களாதேஷ் புதிய முயற்சி

## 2ஆவது டெஸ்ட் இன்று ஆரம்பம்



(டாக்கா)

பங்களாதேஷ்-இலங்கை அணிகளிற்கிடையிலான தீர்க்கமான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி இன்று டாக்காவில் ஆரம்பமாகின்றது.

பங்களாதேஷிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மஹேல ஜெயவர்தனா தலைமையிலான இலங்கை அணி 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் இலங்கை அணி வெற்றிபெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ள நிலையில் இன்று ஆரம்பமாகும் இரண்டாவது டெஸ்டில் எவ்வாறு ஆவது வெற்றிபெற்று சொந்தமண்ணில் தொடரை சமனிலையாக்க வேண்டுமென்ற முயற்சியில் பங்களாதேஷ் அணி உள்ளது. எனினும் முதலாவது டெஸ்டில் காயம் காரணமாக விளையாடாத சுழல் நாயகன் அஜந்த மெண்டிஸ் இன்று ஆரம்பமாகும் போட்டியில் களமிறங்கவுள்ளார்.

இதனால் மெண்டிஸின் சுழல்பந்தை எளிதில் எதிர் கொண்டு விளையாடுவது தொடர்பில் கடந்த இரு தினங்களாக பங்களாதேஷ் அணி வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர்.

இதேவேளை முதலாவது டெஸ்டில் இலங்கை அணியை இறுதி வரை போராட வைத்த பங்களாதேஷ் அணியின் ஆட்டம் குறித்து விமர்சித்துள்ள கிரிக்கெட் ஆய்வாளர்கள், இப்போட்டியிலும் பங்களாதேஷ் அணி வீரர்கள் சவாலாக ஆடுவார்கள் எனத் தெரிவித்துள்ளனர்.

# வோகனை அணியில் சேர்க்கவில்லை பீற்றர்சன் ராஜினாமா மிரட்டல்

(லண்டன்)

மேற்கிந்தியதீவுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான அணியில் மைக்கெல் வோகன் சேர்க்கப்படாததை அடுத்து அணித் தலைவர் பீற்றர்சன் மற்றும் பயிற்சியாளர் பீட்டர் மூர்சுக்கு இடையே மோதல் வெடித்துள்ளது.

பயிற்சியாளரை நீக்காவிட்டால் தனது பதவியை ராஜினாமா செய்ய போவதாக பீற்றர்சன் எச்சரித்துள்ளார். சமீபத்தில் இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட இங்கிலாந்து அணி ஒருநாள் தொடரை 5:0 என பரிதாபமாக கோட்டைவிட்டது. டெஸ்ட் தொடரையும் 1:0 என இழந்து ஏமாற்றம் அளித்தது.

இந்நிலையில் இங்கிலாந்து அணி மேற்கிந்தியதீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு நான்கு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க இருக்கிறது.

இதற்கான இங்கிலாந்து அணி கடந்த 29ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. இதில் காயம் குணமடைந்த நிலையில் மைக்கெல் வோகன் இடம்பெற வேண்டும் என பீற்றர் சன் வலியுறுத்தினார். ஆனால் அதை மூர்ஸ் கண்டு கொள்ளவில்லை.

இதையடுத்து இவர்களுக்கு இடையிலான மோதல் முற்றியுள்ளது. இந்நிலையில் பீற்றர்சன் தனது பதவியை ராஜினாமா செய்ய போவதாக இங்கிலாந்து கிரிக்கெட் சபை தலைவர் கைல்ஸ் கிளார்க்கிடம் தெரிவித்திருப்பதாக டெஸ்லி மெயில் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.


அச்செய்தியில் பீற்றர்சன், கைல்சிடம் பயிற்சியாளரை நீக்குங்கள் அல்லது நான் ராஜினாமா செய்து கொள்கிறேன் என தெரிவித்துள்ளார். இங்கிலாந்து அணியை பொறுத்தவரை பயிற்சியாளருக்கு தான் அதிக முன்னுரிமை தரப்படும் என்றாலும் பீற்றர்சன் தலைசிறந்த வீரர் என்பதால் யாருக்கு ஆதரவு அளிப்பது என்பது தெரியாமல் இங்கிலாந்து கிரிக்கெட் சபை திணறுகிறது என வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் கைல்ஸ் கிளார்க், பீற்றர்சனை அழைத்து இப்பிரச்சினை தொடர்பாக பேசவிருப்பதாக தெரிகிறது. ஆனால் இங்கிலாந்து கிரிக்கெட்சபை இதை மறுத்துள்ளது. இதுகுறித்து கிரிக்கெட் சபை வெளியிட்ட செய்தியில்,

ஒவ்வொரு தொடர் முடிந்தவுடன் கிரிக்கெட் சபை வீரர்களின் செயல்பாடு குறித்து ஆலோசிப்போம். அதற்கான கூட்டத்தில் பங்கேற்பதற்காகத்தான் பீற்றர்சன் அழைக்கப்பட்டுள்ளார். என குறிப்பிடப்பட்டுள்ளது. இது குறித்து இங்கிலாந்து கிரிக்கெட்சபை அதிகாரி ஒருவர் கூறுகையில்,

பீற்றர்சன், வோகன் சிறந்த வீரர்கள். இவர்களை ஒதுக்கிவிட முடியாது. இனிவரும் தொடர்களில் பீற்றர்சன், மூர்ஸ் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு இருப்பதாக தெரியவில்லை. இப்பிரச்சினைக்கு மூர்சை நீக்குவது தான் தீர்வாக இருக்கும். ஆனால், இங்கிலாந்து கிரிக்கெட்சபை நிர்வாக இயக்குநர் ஹக் மோரிஸ், மூர்சுக்கு ஆதரவாக இருப்பதால் இதுவும் கடினமே என்றார்.

# ஒருநாள் தொடரிலிருந்து அணித் தலைவர் சிமித் விலகல்



(மெல்போர்ன்)

அவுஸ்திரேலியாவுடன் நடக்கவுள்ள ஒரு நாள் போட்டித் தொடரில் இருந்து தென்னா பிரிக்க அணித்தலைவர் கிரீம் ஸ்மித் காயம் காரணமாக விலகி உள்ளார்.

அவுஸ்திரேலியா சென்றுள்ள தென்னா பிரிக்கா 3 டெஸ்ட், 2 இருபது-20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது.


இதில் டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்க 2:0 என்ற கணக்கில் தனதாக்கி சாதனை படைத்த நிலையில் சிட்னியில் இன்று ஆரம்பமாகவுள்ள கடைசி டெஸ்டுடன் சிமித் சிகிச்சைக் காக நாடு திரும்புகிறார்.

அவருக்கு பதிலாக ஜோகன் போதா அணித் தலைவராக செயல்படுவார் என பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

சிமித் இடத்தில் நீல் மெக்கன்சி விளை யாடுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து பயிற்சியாளர் ஆர்தர் கூறுகை யில், சிமித் இல்லாவிட்டாலும் ஒரு நாள் தொட ரில் எங்கள் அணி சிறப்பாக விளையாடும்.

ஒருநாள் போட்டிகளில் தென்னாபிரிக்க அணி இன்னும் முழு வலிமை பெறவில்லை. இளம் வீரர்களுக்கு இந்த தொடர் நல்ல வாய்ப் பாக அமையும் என்றார்.

# இப்போது இல்லை நம்பர்-1; இந்தியாவுக்கு கங்குலி சூடு



(புதுடில்லி)

தோனி தலைமையிலான இந்திய அணி இப்போதே நம்பர்-1 அந்தஸ்து பெற்று விட்டதாக குறிப்பிட முடியாது. அன்னிய மண்ணில் திறமையை நிரூபித்து காட்ட வேண்டும். அதன் பின்னரே முதலிடம் பற்றி முடிவு செய்ய இயலும் என முன்னாள் இந்திய அணித் தலைவர் கங் குலி ஆவேசமாக தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு இந்திய அணி மகத்தான எழுச்சி கண்டது. தோனியின் சிறப்பான வழி நடத்தலில் வெற்றி மேல் வெற்றி பெற்றது. இதையடுத்து கிரிக்கெட் அரங்கில் மிக விரைவில் முதலிடத்தை எட்டி விடும் என்று கணிக்கப்பட்டது.

இதனை மறுத்துள்ள கங்குலி, அவசரப்பட்டு எதையும் சொல்லக் கூடாது என எச்சரித்துள்ளார். இது குறித்து அவர் அளித்த பேட்டியில் அவுஸ்திரேலியாவின் சமீபத்திய வீழ்ச்சியை வைத்து இந்தியா தான் நம்பர்-1 அணி என்று சற்று முன்னதாகவே சொல்கின்றனர்.

இப்போதைக்கு முதலிடம் பெற்று விட்டதாக கூற முடியாது. இந்தியா சிறந்த அணிதான். ஆனாலும் அன்னிய மண்ணில் திறமையை நிரூபித்து காட்ட வேண்டும்.

அடுத்து நடக்க உள்ள நியூசிலாந்து தொடரில் கடும் சவால் காத்திருக்கிறது. கடந்த ஆண்டு இந்திய அணி உள்ளூரில் தான் அதிக போட்டிகளில் பங்கேற்றது என்பதை மறந்து விடக் கூடாது.

கடந்த சில மாதங்களாக அவுஸ்திரேலிய அணி மோசமாக விளையாடியது. ஆனாலும் ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் மற்ற அணிகளை காட்டிலும் முன்னிலையில் உள்ளது.

ஒட்டுமொத்த செயல்பாட்டின் அடிப்படையில் தென்னாபிரிக்க அணியை விட இந்தியா தான் சிறந்தது என்றும் சொல்ல முடியாது. கடந்த 9 டெஸ்ட் தொடர்களில் தென்னாபிரிக்கா ஒன்றை கூட இழக்கவில்லை. இங்கிலாந்து, அவுஸ்திரேலியாவை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தி சாதித்துள்ளது.

**அவகாசம் தேவை**

சச்சின், டிராவிட் போன்ற சாதனை வீரர்கள் ஓய்வு பெற்றால் அவர்களது இடத்தை நிரப்புவது மிகவும் கடினம். கவாஸ்கர் வெங்கசர்க்கார் போன்ற ஜாம்பவான் வீரர்கள் விடைபெற்ற போது சச்சின், டிராவிட் வந்தனர்.

எனவே இந்தியாவில் திறமைக்கு பஞ்சமில்லை. ஆனாலும் இளம் வீரர்கள் தங்களை நிலைநிறுத்திக் கொள்ள போதிய கால அவகாசம் தரப்பட வேண்டும்.

அப்போது தான் அவர்கள் வெற்றி நாயகர்களாக ஜொலிக்க முடியும். மும்பை தாக்குதலை தொடர்ந்து இந்திய அணியின் பாகிஸ்தான் பயணம் ரத்து செய்யப்பட்டது சரியான நடவடிக்கையே. பயங்கரவாதிகளின் தாக்குதல் தொடர்பாக டிவியில் பார்த்த சம்பவங்கள் அதிர்ச்சி தந்தன. இந்த நேரத்தில் பாகிஸ்தான் செல்வது சரியாக இருக்காது. இவ்வாறு கங்குலி தெரிவித்துள்ளார்.

# தோனிக்கு மிரட்டல் மூன்று பேர் கைது

(ராஞ்சி)

இந்திய கிரிக்கெட் வீரர் தோனிக்கு கொலை மிரட்டல் விடுத்தது தொடர்பாக மூன்று பேரை பொலிஸார் கைது செய்தனர்.

தோனி ரூ.50 இலட்சம் தராவிட்டால் அவரை கொல்லப் போவதாக தாவூத் இப்ராகிம்மின் கூட்டாளி என்ற பெயரில் கடந்த திங்கட்கிழமை ஒரு மிரட்டல் கடிதம் வந்தது. பின்னர் பொலிஸாரிடம் தோனி புகார் செய்தால் அவரது வீட்டை குண்டு வைத்துத் தகர்ப் போம் என்று இரண்டாவதாக ஒரு கடிதம் வந்த தது.

இதையடுத்து ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் உள்ள தோனியின் வீட்டுக்கு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்து.45 கமாண் டோப்படையினர் அவரது வீட்டுப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்நிலையில் கொலை மிரட்டல் தொடர்பாக 3 பேரைக் கைது செய்துள்ளதாக ஜார்க்கண்ட் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர். எனினும் கைது செய்யப்பட்டுள்ளவர்கள் குறித்து எந்த விபரமும் வெளியிடப்படவில்லை.



விமானத் தலைமையகத்திற்கு முன்பாக நேற்று இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ள பொலிஸாரைக் காணலாம்.

## விமானப் படை தலைமை...

கவலைக்கிடமாக இருப்பதாகவும் மருத்துவ மனை விபத்து பிரிவு பணிப்பாளர் ஆரிய வன்ச தெரிவித்துள்ளார்.

விமானப் படையைச் சேர்ந்த 16 பேரும் பொதுமக்களில் 20 பேருமாக 36 பேர் காய மடைந்துள்ளனர். காயமடைந்த 16 விமானப் படையினரில் 4 பேரின் நிலை கவலைக்கிட மாக உள்ளதாக மருத்துவமனை விபத்துப் பிரிவு வட்டாரங்கள் கூறுகின்றன.

இதேவேளை காயமடைந்தவர்களில் தரைப்படையினர் சிலரும் உள்ளடங்குவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத நபர் விமானப் படை தலைமை யகத்துக்குள் நுழைய முற்பட்டபோது இக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றதாக படைத் தரப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை தாக்குதல் இடம்பெற்ற போது அப்பகுதியால் சென்று கொண்டிருந்த பயணிகள் பேருந்தும் சிறிய சேதத்துக்குள் ளானதாகவும், அதில் பயணம் செய்தவர்கள் சிலர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் மற்றொரு தகவல் தெரிவிக்கிறது.

இதேவேளை இத்தாக்குதல் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் இரண்டு தமிழ் இளை ஞர்களை கைது செய்துள்ளதாக கொம்பனித் தெரு பொலிஸார் தெரிவித்தனர்.

கொம்பனித் தெரு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இருவரையும் இர கசியப் பொலிஸார் விசாரணை செய்வதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இத் தாக்குதலையடுத்து சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தை, லேக்ஹவுஸ் சுற்று வட்டம் மற்றும் அதனை அடுத்துள்ள வீதிக ளில் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளதுடன் போக்குவரத்துக்கும் தடை விதிக்கப்பட்டது.

தாக்குதல் இடம்பெற்ற இடத்திற்கு அரு கில் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் மற் றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தங்கும் ரான்ஸ் ஏசியா என்ற ஐந்து நட்சத்திர விடுதி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்தாக்குதல் விடுதலைப் புலிகளினா லேயே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரசு கூறி யுள்ளபோதும் புலிகள் தரப்பிலிருந்து தகவல் கள் எதுவும் வெளியாகவில்லை. (ச-5)

## புலிகளின் அடுத்த கட்ட...

அரசியல் மற்றும் இராணுவ ரீதியான கார ணங்களால் முக்கியத்துவம் வாய்ந்ததாக கரு தப்படுகிறது. அரசியல் ரீதியாக விடுதலைப் புலிகளின் அரசியல் அதிகார மையமாக கிளிநொச்சி இருந்திருக்கிறது.

அங்கிருந்து தான் அவர்களின் பொலிஸ், நீதித்துறை மற்றும் பிற நிர்வாக இயந்திரங் களை நடத்தினார்கள். இராணுவரீதியாக பார்த்தால் கிளிநொச்சி கைப்பற்றப்பட்டது என்பது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலி ருக்கின்ற பகுதிகள் அருகிலுள்ள முல்லைத் தீவு மாவட்டத்திற்குள் குறுகிவிட்டன என்றே கூறவேண்டும்.

விடுதலைப்புலிகள் கிளிநொச்சி நகரை இழந்தமை இராணுவம் ஆனையிறவு நோக் கியும் முல்லைத்தீவு நோக்கியும் ஏனைய பகுதிகளிற்கும் முன்னேறக்கூடிய நிலை தோன்றியுள்ளது.

விடுதலைப்புலிகள் ஏன் கிளிநொச்சியிலி ருந்து வெளியேறினார்கள் என்பது குறித்து இந்த தருணத்தில் கூறுவது கடினமானது.

கடந்த சில நாட்களாகவே விடுதலைப் புலிகள் கிளிநொச்சி நகரிலிருந்து வெளி யேறிவந்ததாகவும் ஒரு சில அணிகளை மட் டும் கிளிநொச்சியை தங்கவைத்துக்கொள்ள விட்டுச் சென்றிருப்பது என்பது பற்றியும் கேள் விப்பட்டிருந்தேன்.

ஆனால் இப்பொழுது அவர்கள் முற்று முழுதாகவே வெளியேறிவிட்டார்கள் விடுத லைப் புலிகளின் கண்ணோட்டத்தில் அடுத்து என்ன நடக்கும் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

அடுத்துவரும் மாதங்கள் மிகவும் முக்கி யத்துவம் வாய்ந்த காலகட்டங்களாக இருக் கப்போகின்றது.

விடுதலைப்புலிகள் மீது நெருக்கடிகள் அதிகரித்தால் அவர்கள் தங்களது தாக்குதல் திறனை தற்போது போர் நடக்கும் இடங்க ளிற்கு வெளியே அவர்கள் பயன்படுத்துவார் கள் என இராணுவ ஆய்வாளரும் பத்திரிகை யாளருமான இக்பால் அத்தாஸ் கருத்து வெளியிட்டுள்ளார். (ச-5)

## எறிகணைத்...

நடத்தியுள்ளனர். இதில் கொல்லப்பட்டவரின் உடல் தருமபுரம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இத் தாக்குதலில் மகேந்திரன் (வயது 41), நகுலேஸ்வரன் (வயது 21), சுவேந்தன் (வயது 30), காசிநாதன் (வயது 34), சரோஜினிதேவி (வயது 33), சிவபாக்கியம் (வயது 54), உதய குமார் (வயது 28), ஜெயராஜா (வயது 44) ஆகியோர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த பெண்ணொருவர் மயக்க நிலையில் உள்ளதாக வைத்தியசாலை வட்டா ரங்கள் தெரிவித்தன.

புளியம்போக்கணைப் பகுதியில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் படையினர் நடத் திய எறிகணைத் தாக்குதலில் ஒருவர் கொல் லப்பட்டுள்ளதுடன் மேலும் இருவர் காயம டைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் ஒருவர் தங்கராசா கமலாம்பிகை (வயது 60) என அடையாளம் காணப்பட்டுள்ளார். (ச-5)

## விமானத்...

அதனை அண்டிய கட்டடங்கள் ஆகி யன அழிந்துள்ளன. இரண்டாவது தடவையாக பிற்பகல் 5 மணியளவில் சிலாவத்தை மக் கள் குடியிருப்புக்கள் மீது விமானப் படை தொடர் தாக்குதலை நடத்தியுள்ளது.

இதில் பொதுமக்களின் வீடுகள் பல சேத மடைந்துள்ளன. முதலாவது தாக்குதலில் தயாபரன் (வயது 25), நிஷாந்ரூபன் (வயது 34), கஜன் (வயது 24), ராம்சீவன் (வயது 23) ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர்.

தனேஸ் (வயது 25), மகேஸ்வரன் (வயது 45), சிசியந்தன் (வயது 24), ஜீவேந்திரன் (வயது 26), அன்ரன் கமலதாஸ் (வயது 30) ஆகியோர் காயமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு மருத்துவமனைக்கு அருகில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதால் மத்துவம னைச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு தகவல்கள் தெரிவித்தன. (ச-5)

# கிளிநொச்சி படையினர் வசம்...

கிளிநொச்சியைக் கைப்பற்றியமையை அடுத்து நாட்டுமக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி மேலும் கூறியதாவது,

விடுதலைப்புலிகளின் முக்கிய கோட்டை களில் ஒன்றாக விளங்கிய கிளிநொச்சி நகரத்தினை படையினர் முழுமையாக கைப் பற்றியிருப்பது அளப்பரிய சாதனை யென் றும் வரலாறு காணாத வெற்றி யென்றும் தெரிவித்தார்.

எந்த வசனத்திலும் சரி எந்த பாஷை யிலும் சரி கூறினாலும் இந்த வெற்றியானது ஒரு சமாந்தரமற்ற முழுமையான வெற்றி யாகும்.

இது நாட்டு மக்கள் அனைவருக்கும் உரிய வெற்றியாகும்.

எமது படைவீரர்கள் அடைந்திருக்கின்ற இந்த வெற்றியானது புலிகளுக்கு எதிராகப் பெறப்பட்ட வெற்றி மட்டுமல்ல; இது உலகப் பயங்கரவாதத்திற்கு எதிராகக் கிடைத்த வெற்றியாகும்.

முழு உலகமுமே இந்த வெற்றியை பாராட்டுகின்றது.

இந்த வெற்றியை ஒரு இனத்திற்கு எதி ராக இன்னொரு இனம் பெற்ற வெற்றியாகக் பார்க்கவேண்டாம்.

அதேபோல வடக்குக்கெதிராக தெற் கினால் பெறப்பட்ட வெற்றியாகவும் தவறாக அர்த்தப்படுத்திக்கொள்ளவேண்டாம்.

இது இந்த நாட்டில் வாழும் சகலரினதும் முழுமையான வெற்றியாகும்.

கொடிய பயங்கரவாதத்திற்கு எதிராக பெறப்பட்ட முக்கிய வெற்றியாகும்.

வடக்கில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இராணுவ வீரர்களுக்கும் ஏனைய முப்படையினருக்கும் இந்த நாட்டு மக்களின தும் இந்த அரசாங்கத்தினதும் நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்.

பயங்கரவாதத்திற்கு எதிரான போருக்கு நாட்டு மக்கள் இதுவரை ஆற்றி வந்த ஒத்து ழைப்பினை புலிகள் முல்லைத்தீவை இழக்கும் வரை தொடர்ந்து வழங்கவேண்டுமெனவும் கேட்டுக் கொண் டார்

இந்த நிகழ்வின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழிலும் சிறிது சிறுது நேரம் உரையாற்றினார்.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஜனா திபதி செயலகத்தில் நடைபெற்ற கிளிநொச்சி யின் வெற்றியை அறிவிக்கும் நிகழ்வில் முப் படைத் தளபதிகளும் மூத்த அரசியல்வாதி களும் அமைச்சர்களும் கலந்து கொண் டனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளிடமிருந்து முல்லைத்தீவை மிக விரைவில் கைப்பற்று வோம் என்று இராணுவத் தளபதி சரத் பொன் சேகா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுப் பிற் பகல் 4மணிக்கு நடைபெற்ற சிறப்பு நிகழ் வில் கிளிநொச்சி நகர் படையினரால் கைப் பற்றப்பட்ட செய்தியை தரைப் படைத்தளபதி சரத் பொன்சேகா, மஹிந்த ராஜபக்ஷவிற்கு அறிவித்த பின்னர் உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சியிலிருந்து 2கிலோமீற்றர் தூரத்திலேயே ஆனையிறவு உள்ளது. 5 கிலோ மீற்றர் தொலைவில் முல்லைத்தீவு உள்ளது.

எனவே மிக இலகுவாக கைப்பற்றி விடு வோம் என்றார் சரத்பொன்சேகா. புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு சரண டைவதுதான் அவர்களுக்குள்ள ஒரே வழி என்றும் கூறினார்.

கடந்த இரு மாதங்களில் 1500 விடு தலைப்புலிகள் படையினரால் கொல்லப் பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை விடுதலைப்புலிகளின் தலைநகராகச் செயற்பட்டு வந்த கிளிநொச்சி நகருக்குள் இராணுவம் நுழைந்ததாக நேற்றுக்காலை பாதுகாப்பு அமைச்சு அறி வித்துள்ளது.

வடபகுதியை தரைவழியாக இணைக்கும் முக்கிய சாலையாகிய ஏ9 வீதியில் அமைந் திருக்கும் கிளிநொச்சி நகரின் தெற்கு மற்றும் வடக்கு மேற்குத்திசைகள் உட்பட்ட மும் முனைகளில் இராணுவத்தினர் ஏற்கனவே அந்த நகரை முற்றுகையிட்டு இருந்ததாக வும் எந்த நேரத்திலும் அந்த நகரை இராணு வத்தினர் கைப்பற்றி விடுவார்கள் எனவும்,

முன்னதாக அரசாங்கம் அறிவித்திருந்த நிலையில் தெற்கே இரணைமடு சந்தியிலும் வடக்கே பரந்தன் சந்தியிலும் நிலைகொண்டி ருந்த இராணுவத்தினர் கிளிநொச்சி நகருக் கும் பரந்தன் சந்திக்கும் மிடையில் உள்ள மற்றுமொரு முக்கிய சந்தியாகிய கரடிப் போக் குச் சந்தியையும் கிளிநொச்சி நகரின் ரயில் நிலையப் பகுதியையும் கைப்பற்றிவிட்டதாக நேற்றுக்காலை தேசிய பாதுகாப்பு அமைச் சகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் கிளிநொச்சி நகருக் குத்தெற்கே விடுதலைப் புலி களுக்கு எதிரான தாக்குதல் நடவ டிக்கைகளில் ஈடுபட் டிருந்த இராணுவத்தின் 57ஆம் படைப் பிரிவும், வடக்கில் பரந்தன் பிர தேசத்தில் நடவடிக்கைகளில் ஈடுபட் டிருந்த தாக்குதல் டாஸ்க் போஸ்-1 எனப்படும் தாக்குதல் படையணி-1 உம் கிளிநொச்சி நகரப்பகுதியில் இணைந்துள்ளதாகவும் இதனூ டாக ஓமந்தையில் உள்ள இராணு வச் சோதனைச்சாவடியில் இருந்து பரந்தன் வரையிலான ஏ-9 வீதி இராணுவத்தின் முழுமையான கட்டுப்பாட்டில் வந்துள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சகம் கூறியி ருக்கிறது.

எனினும் இது குறித்து விடுத லைப்புலிகள் தரப்பிலிருந்து உடன டியாகத் தகவல் எதுவும் வெளியாக வில்லை. (ச-3,5)

DMI
A/L 2011
ஜனவரி – 10
காலை 9.00 மணி
நாவலர் வீதி, யாழ். ஸ்ரான்லி வீதி, யாழ்.

Uduvil Girls' College - Announcement
REOPENING: GRADE ONE AND THE NURSERY
*Grade One:* Tuesday January 13th 2009 - at 9.00 am
*Nursery:* Thursday January 15th 2009 - at 9.00 am
Principal
(C-1947)

வடமராட்சியின் முன்னணி ஆசிரியர்களின் ஒன்றிணைந்த சேவையில்
A/L - 2011
★ கலை,வர்த்தக பிரிவுகள் வழமையான ஆசிரியர் குழுவுடன்
அரசியல் விஞ்ஞானம் – திருச்செந்தூரன்
ICT – பிரபல ஆசிரியர்
ஆரம்பம்- 05.01.2009 திங்கள் A.M.-7.30
(C-1944)

தொழிற் பயிற்சிகள்
உள்நாட்டிலும்,வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்புப் பெறக்கூடிய முறையில் முழுநேர செய்முறைப் பயிற்சிகளுடன் பயிற்சியளிக்கப்படும்.
❖ Mobile Phone Repairing
Hard Ware — Hard Ware Repairing
Soft Ware — Phone Lock — காலம்:- 3 மாதங்கள்
❖ Diploma in Hard Ware Engineering — காலம்:- 3 மாதங்கள்
❖ ரேடியோ, ரெலிவிசன், வீடியோடெக் ரிப்பியறிங்
சகல இன ரேடியோக்கள், ரெலிவிசன், வீடியோ டெக், CD,Amp திருத்துதல் பயிற்சியளிக்கப்படும். காலம்:- 9 மாதங்கள்
❖ ஏயர் கொண்டிசனிங்
சகல குளிர் சாதனப் பெட்டிகள், ஏயர்கொண்டிசன்கள் திருத்தும் முறைகள் பயிற்சியளிக்கப்படும். காலம்:- 6 மாதங்கள்
❖ எலக்ரிக்கல் வயறிங்,ரீவைண்டிங்,வீட்டு மின் வேலை,மோட்டார், Fan,Transformer வைண்டிங் செய்யப்படும் முறை பயிற்சியளிக்கப்படும். காலம்:- 6 மாதங்கள்
ஆரம்பம் :- 10.01.2009 (சனி), 12.01.2009 (திங்கள்)
JAFFNA TECHNICAL INSTITUTE
இல., 45 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 6434, 0779254078
(C-1943)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.01.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.